
# கலப்பை

KALAPPAI 60 களம் 15 ஏர் 4 சித்திரை 2009 2.50



கலப்பை காலாண்டுச் சஞ்சிகையின்
15ஆவது ஆண்டு நிறைவு விழா
(1994 தொடக்கம்)

## 15th Anniversary for Kalappai Quaterly Magazine (Since 1994)

கலப்பையின் 15ஆவது ஆண்டு நிறைவுக் குறித்து விழா ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் 15ஆவது ஆண்டு மலரை (61வது இதழ்) வெளியிடவிருக்கின்றது.

இடம்: ஹோம்புஷ் உயர்தர ஆண்கள் பாடசாலை
(Bridge Road, Homebush)
நேரம்: பி.ப. 6.00 மணி, ~~[illegible]~~
6/2/10

15 வருட நினைவு தழுவிய பல்சுவை நிகழ்கள் இடம் பெற இருக்கின்றன.

உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தொடர்புகளுக்கு :
தொலைபேசி : 612 - 9758 - 7970 or 0433 088 725
Email : kalappai@gmail.com
Website : www.kalappai.org

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Australian Society of Graduate Tamils (ASOGT)

The Basis of Emotional Thinking of The Tamil Diaspora உலகத் தமிழர் உணர்வுகளின் கருவூலம்
Contact: PO Box 4040 Homebush NSW 2140.
Tele : 61 (0) 433088 725 or 612 - 9758 7970. Web : www.kalappai.org

## உள்ளே...


உழவன் உள்ளத்திலிருந்து -------- 2
யார் இந்த மங்கை? ------------ 5
மனிதனும் தெய்வமாகலாம்-------- 6
அன்பைத்தேடி --------------- 8
சங்கமம் - 2 --------------- 19
ஐங்குறுநூறு தரும் காதல் சுவை -- 30
கார்ல் மார்க்ஸ் தத்துவமும்
வட்டிக்கடை வரதராசாவும்! ------- 37
பெண் வளர்ந்து
பெரியவளானால் ------------ 40
The good, the bad and the tram - fad -------------- 4
இந்துக் கோயில்களில் சண்டேசுவர
நாயகனானரை ஏன் வணங்குகிறோம்
இவர் யார் --------------- 54
நான் தயார் --------------- 59


கலப்பை

மனித மனத்தை உழுகின்ற
கலப்பை
உலகத் தமிழர்தம் உணர்வை
உயர்த்தி நிற்கும்

கலப்பை
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள்
தமிழர் சங்க ஆதரவில் வெளிவரும்
காலாண்டுச் சஞ்சிகை

தனிப்பிரதி : Aus. $2.50
ஆண்டுச் சந்தா
உள்நாடு : Aus. $10.00
வெளிநாடு : Aus. $20.00

பிரசுரிக்கப்படாத படைப்புகளைத்
திரும்பப் பெற இயலாது.
ஆசிரியர் குழுவுடன்
தொடர்புகொள்ள.....
Tel : (612) 9758 7970


**KALAPPAI**
P.O. Box 4040,
Homebush, NSW 2140
AUSTRALIA
E-mail : kalappai@gmail.com
Internet : www.kalappai.org

இதழ் வடிவமைப்பு
மித்ர ஆர்ட்ஸ் & கிரியேஷன்ஸ்
☎ 91 - 44 - 2372 3182 / 2473 5314
E-mail : contact@mithra.co.in
www.mithra.co.in

# உழவன் உள்ளத்திலிருந்து...



குரல் என்பது ஒலி சார்ந்தது. ஒலி என்பது மொழி சார்ந்தது. மொழிதான் உரிமை. உரிமைக்காகக் கொடுப்பதுதான் உண்மையான குரல். அதுதான் குரல் கொடுத்தல் . எம் மக்களின் உரிமைக்காக, துயரங்களிலிருந்து மீட்பதற்காக உலகளாவிய தமிழ் நெஞ்சங்களின் குரல் கொடுப்பு நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. எமது தமிழ் உரிமைப் போராட்டம் இன்று புலம் பெயர்ந்திருக்கின்றது.

ஆணிவேர் அறுந்த அவலத்தில் எம் மக்கள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். உதவி என்பது பணம் மட்டுமல்ல, உரிமை மீட்பும்தான். தமிழர் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலெல்லாம் அடுத்த கட்டம் என்ற முன்னெடுப்புகள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றன. அணிசேரல் என்பது இன்று அவசியமாகி விட்டது. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதுதான் தமிழனின் தலைவிதிக்குரிய தத்துவம்.

மொழிக்கு விழா எடுக்கும் முயற்சிகள் கூட இந்நாளில் அரங்கேறக் காத்திருக்கின்றது. தமிழனின் உயிர் போவதைப் பார்த்துக் கொண்டிருந்த தமிழன் தார்ப்பரியம் இன்று உலகத் தமிழுக்கு விழா எடுக்கும் முயற்சியில் இறங்கியிருக்கின்றது. மனிதப் பேரவலம் நடந்து கொண்டிருந்தபோது தியானத்திலிருந்த உலகம் இன்று உலகின் பழமையான மொழிக்கு பட்டமளிப்பு விழா நடாத்தத் தயாராகிக் கொண்டிருக்கின்றது. அதற்கு, பாதிக்கப்பட்டவர்களின் பக்கமிருந்து பந்தல்கால் நடுவதற்கு பதவி வழங்கும் முயற்சியும் நடக்கின்றது.

குரல்வளை நெரிக்கப் பட்ட நிலையில் கிடக்கும் மக்களுக்கு கவிதைபாடிக் களிப்பூட்டும் முயற்சியா இது என்று பல்வேறு படைப்பாளிகள் கேள்வியெழுப்பியுள்ளனர். அழிந்துபோன ஒரு இனத்தின் அஞ்சலிக் கூட்டத்தையா இவர்கள் விழாவாக்க நினைக்கிறார்கள்? தமிழ் மாநாடு மக்களுக்கா? மொழிக்கா? இல்லை, நடத்தியவர் பெருமை நாலா புறமும் சென்றடைவதற்கா?


தான் கூவியதால் தான் பொழுது விடிந்தது என்று சொல்லிக்கொள்ளும் சேவல் சேவைகள் செய்த இவர்களின் இந்த முயற்சியினால் தமிழ் வாழ்கின்றது என்று பெருமை சொல்லிக் கொள்ளலாம். பதப்படுத்தி பாதுகாத்து வைப்பதற்கு கற்ற மொழி ஒன்றும்



கருவாடல்ல. உயிரோடும், உணர்ச்சியோடும் வாழக்கூடிய உயிராக வாழவேண்டியதே மொழி. அந்த மொழிக்காக, உரிமைக்காக இரத்தம் சிந்திய உயிர்களுக்குத்தான் விழா வேண்டும். போராடியவர்களுக்குத்தான் விழா வேண்டும். தமிழை வைத்து வியாபாரம் செய்யும் தமிழினத் தலைவர்கள் இதைப் புரிந்துகொள்ளவேண்டியது கடமையாகும்.

உள்ளத்தில் உள்ளவரை உயிருக்கு விழா தேவையில்லை. ஈழக்களவில் வாழ்ந்தவர்கள், வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு மொழிதான் கடவுள். அந்த மொழி வணக்கம் எம் நெஞ்சங்களில் என்றும் நிறைந்திருக்கும். வாழ்வதைத் தடைசெய்யலாம். அது மண் சார்ந்த, இடம் சார்ந்த நிகழ்வு. எமது உரிமையைப் பேசத் தொடங்க வேண்டும்.

இந்த நேரத்தில் எமக்கு நாமே துணை. அடுத்த நிகழ்வை அனைவரும் ஒன்று சேர்ந்து ஆக்கபூர்வமாக ஆக்கிக்கொள்வோம். கடந்து போனவர்களின் கனவுகளைக் காப்பாற்றும் முயற்சியில் பங்கெடுப்போம். உரிமைதான் எமது மொழி. அந்த மொழியின் மாநாட்டை நாம் எம் மண்ணில் என்றோ ஒருநாள் நிகழ்த்துவோமாக.




கவிதைக்குள்ளே விடை



# யார் இந்த மங்கை?

பார் போற்றும் மங்கை, பலர் காத்த நங்கை.
நார் ஆக வளைந்து நாலுபேரை வாழ வைத்த தங்கை.
நேர் பாதை நடந்து, பலர் நெஞ்சம் புகுந்த மேதை.
சீர் பல கொடுத்து, ஏழைகளின் வாழ்வை
சீர்படுத்திய சீமாட்டி.
ஏர் கொண்டு மக்கள் மனங்களை உழுது
அன்பின் மகிமை சொன்ன அன்பரசி.
பார் எங்கும் வாழும் தமிழ் உறவுகளின் மனங்களில்
குடிபுகுந்த தங்கமான அம்மா.
தார் போட்ட பாதையில் நடைபயிலும் அனாதைப்
பிள்ளைகளுக்கு என்றும் இவர் பெரியம்மா.
யார் இந்தப் பெயர் பெற்ற நங்கை
பெயர் தெரிந்தால் சொல்லுங்களேன்.

விடை:- அப்பாக்குட்டி தங்கம்மா.



கலா விக்னேஸ்வரன்
9/58, Burlington Road,
Homebush N.S.W. 2140
9746 0084



# மனிதனும் தெய்வமாகலாம்

**தெ**ய்வம் என்றால் என்ன? தற்காலிக கோப தாபங்களுக்கு முழுக்குப் போட்டுவிட்டு நிரந்தர குண நலன்களைக் குடமுழுக்குச் செய்வது, நிரந்தரப் புன்னகையை முகத்தில் அப்பிக்கொண்டு அமைதிப் பூங்காவாகப் பூத்து, கனிவு நிறைந்த கண்மலர்களோடு, காட்சிதர முடிவு செய்து கொள்வது தெய்வீகம். நமது கோயில் சிற்பங்களைப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும். நிரந்தரப் புன்னகையும் நித்திய ஆனந்தமும் அருள் ததும்பும் கண்களுமென அமைதி காக்கும் திருக்கோலங்களை நாம் தெய்வமென்று வழிபடுகிறோம். அப்படியாயின் தெய்வீகம் என்றால் அன்பு, அழகு, பண்பு, பணிவு, கருணை, கனிவு, தயவு, தாட்சண்யம் என்றுதானே பொருள்படுகிறது.

ஆகவே, மனிதன் தெய்வமாக ஆவதற்குத் தடையாக இருப்பது இந்தக் குணமின்மையே. குணங்களைக் கூட்டிக்கொண்டால் மனிதனும் தெய்வம்தான். குணங்கள் குறைந்தால் மனிதன் மிருக நிலைக்குத் தள்ளப்படுகிறான். நாம் சற்றுக் கோபம் வந்து கத்தினால் அதை மிருகத்தன்மையோடு ஒப்பிடுகிறோம். குணம் நிறைந்தால் அவரைத் தெய்வமாக வணங்குகின்றோம். நான் எவ்வளவு திட்டியும் அவர் பதறாமல் சிதறாமல் அமைதி காக்கிறாரே என்று தெய்வீகக் குணங்களைப் பாராட்டுகிறோம். மிகவும் இக்கட்டான நிலையில் நமக்குப் பணம் கொடுத்து உதவினால் தெய்வமாக வந்து கை கொடுத்தார் என்று ஒருவரின் தாராள குணத்தைப் போற்றுகிறோம். ஆபத்தான இன்னல்களிலிருந்து உயிர் தப்பும்போது தெய்வாதீனமாகப் பிழைத்தேன் என்று வியக்கிறோம்.

இப்படித்தான் ஒருமுறை ஒரு முரடன் துணி வியாபாரம் செய்து கொண்டிருந்த திருவள்ளுவரை அவமானப்படுத்த ஒரு துணியை எடுத்து இரண்டாகக் கிழித்து அதன் விலை என்ன என்று கேட்டான். வள்ளுவர் கோபப்படாமல் விலை கூறினார். இத்தனை கிழிந்த துண்டுகள் எதற்கும் உதவாது என்று அவர் முகத்திலே எறிந்தான். பாதகமில்லை, கந்தல் துணிக்காவது உதவும் என்று வள்ளுவர் அமைதி காத்தாராம். இதைப் பார்த்த முரடன் மனம் திருந்தி வள்ளுவரிடம் மன்னிப்புக் கேட்டான்.

மனித வாழ்வு, கல்மண் தெரியாமல் காட்டுமிராண்டியாக வாழ்வதற்கு இல்லை. கண்ணைத் திறந்து மண்ணையும் விண்ணையும் நன்கு கவனித்துப் பொறுமையாக வாழ்வதற்கு. மண்ணுக்குத்தான் எவ்வளவு பொறுமை. நாம் மிதித்தாலும் சோறு போடுகிறது. பெற்ற தாய்க்கே இருக்குமா இவ்வளவு கரிசனம்! விண்ணுக்குத்தான் தன்னைப் போல் எத்தனை பரந்த மனப்பான்மை. தன்னில் எது நடந்தாலும் கொஞ்சம்கூடக் காயப்படாமல் இடம் கொடுக்கிறது. நம் மனைவிக்கு இருக்குமா இந்தப் பெருந்தன்மை? காற்றுக்குத்தான் எத்தனை கருணை? நாம் மறந்தாலும் தான் மறவாமல் நம் தூக்கத்திலும் நம் மூக்கிலே புகுந்து நம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. நமது அரசுக்கு வருமா இத்துணை தயவு?

கோடுகளை நேராக்கினால் வாழ்க்கையில் நிமிர்ந்து நிற்கலாம். கையில் இருக்கும் கோடுகள் (ரேகைகள்) நம் தலை எழுத்தை நிர்ணயிக்கின்றன என்று சிலர் உளறுவார்கள். ஆனால், நமது மனதில் கிழித்திருக்கும் கோடுகள் நமது தலையெழுத்தை முடிவு செய்கின்றன.



ஓம்சாந்தி.

மகேஸ்வரி தேவி நடராஜா



# அன்பைத் தேடி

உஷா ஜவாகர் (அவுஸ்திரேலியா)

அன்று 1983ம் ஆண்டு ஜுலை மாதம் 25ம் திகதி. இலங்கை நாடெங்கும் இனக்கலவரம் கொழுந்து விட்டெரிந்து அந்த மண்ணை, அந்த மாந்தரை, அந்த மண்ணில் கம்பீரமாக உயர்ந்து விளங்கிய கட்டிடங்களை, அமைதியாக சாந்தம் தவழும் முகத்துடன் தரிசனம் தந்த இல்லங்களை என்று எல்லாவற்றையுமே தீக்கிரையாக்கிவிட்ட நாள்! விண்ணை நோக்கி கொழுந்து விட்டெரிந்த தீச்சுவாலைகளைக் கண்டு கலங்காதவர் யார்? உள்ளம் பதறாதவர்தான் யார்?

அன்று மதியம் ஏழே வயதான சுரேஷ் பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள தன் பாடசாலையிலிருந்து வெளியே வந்தான். வழக்கம் போலே தன் பக்கத்து வீட்டு நண்பனான பாலனோடு வெள்ளவத்தையில் உள்ள தன் வீடு நோக்கிச் சென்றான். வழிவழியே காடையர்கள் கூட்டம் கூட்டமாக தடிகளுடனும், கம்புகளுடனும் திரிந்தனர். சில கட்டிடங்களும், கடைகளும் தீக்கிரையாகிக் கொண்டிருந்தன.

'டிக், டிக்' எனப் பதறித்துடிக்கும் இதயத்துடன் கைகள் இரண்டிலும் வியர்வை ஆறாக வழிந்தோட தன்னைவிட வயதில் மூத்தவனான பாலனைப் பார்த்து, "என்ன பாலன் அண்ணா! இப்பிடி எல்லா இடமும் எரியுதே! நாங்க எப்பிடி வீட்ட போய் சேருவது?" என கண்களில் கலக்கத்துடன் வினவினான் சுரேஷ். "நீ பயப்படாதே தம்பி சுரேஷ்! யாரும் ஏதாவது கேள்வி கேட்டால் நீ வாய் திறக்காதே! யாரும் ஏதும்



கேட்டால் நான் சிங்களத்தில் பதில் சொல்லுறன். அப்பிடியென்றால் பிரச்சினை வராது" எனக் கூறிய பாலனைப் பார்த்து "சரி பாலன் அண்ணா" என்று மென்மையாகப் பதிலளித்தான் சுரேஷ்.

ஏழுவயது நிரம்பிய சுரேஷ் சிறு வயதில் 'போலியோ' நோயினால் தாக்கப்பட்டிருந்தான். அதன் பலனாக தன் இடது காலை மெது மெதுவாக இழுத்தபடி நடந்து வந்து கொண்டிருந்தான். தன்னால் இயன்றவரை விரைவாக நடக்க முயலும் சுரேஷை பரிதாபத்துடன் பார்த்தபடி அவனை வாஞ்சையுடன் அணைத்தவாறு ஒருமாதிரியாக வீடு வந்து சேர்ந்தான் பாலன். அங்கு அவர்கள் கண்ட கோரக்காட்சி காண்போர் உள்ளத்தைக் கலங்க வைக்கும் காட்சி! பார்ப்போர் அடிவயிற்றில் நெருப்பை அள்ளிக் கொட்டும் காட்சி!

சுரேஷின் அப்பா கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணிகளை அழைத்துச் செல்லும் தனியார் பேருந்துகள் சிலவற்றை வாங்கி அவற்றை ஓடவிட்டு வியாபாரம் நடாத்தி வந்தார்.

அன்று சுரேஷ் வீட்டின் முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பேருந்து தீயிலிடப்பட்டு அதன் ஜுவாலைகள் விண்ணை நோக்கி உக்கிரத்துடன் கிளம்பிக் கொண்டிருந்தன. சுரேஷ் வீட்டின் முன் அறை ஜன்னலும், கதவும் சுக்கு -நூறாக உடைக்கப்பட்டு ஜன்னல் கண்ணாடித் துகள்கள் நிலமெங்கும் சிந்தியிருக்க, சில பொருட்கள் வெளியே தூக்கி எறியப்பட்டிருக்க, அந்த முன் அறையும் தீக்கிரையாகிக் கொண்டிருந்தது.

இந்தக் கோரக் காட்சியைக் கண்டு பதறிய பாலன் "டேய் சுரேஷ்! நீ என்ற வீட்டுக்கு வா! இங்க உன்ர வீட்டு நிலமை சரியில்லை" என்று கூறிவிட்டு சுரேஷை மிகுந்த கவனத்துடன் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

அங்கு பாலனின் அம்மா ராணி, "என்ற கடவுளே! நல்ல வேளை பாலன் நீ சுரேஷைக் கவனமாக உன்னோட கூட்டிட்டு வந்துட்டாய்! சுரேஷின் அப்பா விடிய பிசினஸ் அலுவலாக கோட்டைக்குப் போனவர், இன்னும் திரும்பேல்லை. நான் சொல்லச் சொல்லக் கேட்காமல் சுரேஷைத் தேடி அவன் அம்மா காந்தி உங்களின்ர பள்ளிக்கூடப்பக்கம் போனவ, இப்ப ஒரு மணி ஆகுது. இன்னும் அவவைக் காணேல்லை. என்ன நடந்துதோ. எனக்கென்றால் ஒண்டும் தெரியேல்லை! அவ

வீட்டை விட்டு வெளிக்கிட்ட கையோடை சில காடையர்கள் வந்து இந்த பஸ்சுக்கும், முன் அறைக்கும் நெருப்பை வைச்சுட்டு போயிட்டானுங்கள்! பாவிகள்!" என்று மிகுந்த வேதனையுடனும், கண்ணீருடனும் கூறி முடித்தாள்.

பாலனின் அம்மா கண்ணீரும் கம்பலையுமாக நின்று கதைப்பதை சில அயலவர்களும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் கழித்து சுரேஷையும், பாலனையும் வீட்டினுள் அழைத்துச் சென்று அவர்களுக்கு மதிய போசனத்தைக் கொடுத்தாள் பாலனின் அம்மா ராணி.

அன்றைய பொழுது கருகிய பொழுதாகவே கழிந்தது. சுரேஷ் வீட்டு முன்னறையில் இருந்து எழுந்த அக்கினியின் வெப்பம், பாலனின் வீட்டையும் வெப்பமாக்கியது. சுரேஷ் வீட்டிலிருந்து எழுந்த புகை மண்டலம் பாலனின் வீட்டு முன்சுவர்களையும் கறுப்பாக்கியது.

நேரம் இழுத்து இழுத்துச் சென்று பின்னேரம் ஐந்து மணியாகியது. இதற்குள் தாய் திரும்பி வராததால் கலக்கமுற்ற சுரேஷ் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தான். பாலனும் அவன் தாயார் ராணியும் தங்களால் இயன்றவரை அவனைத் தேற்ற முயன்றார்கள். அவர்கள் முயற்சி பயனளிக்கவில்லை.

பின்னேரம் ஆறு மணியளவில் சில பொலிஸ்காரர்கள் தங்களுடைய ஜீப்பில் வந்து அந்த அப்பாவி மக்களை சில மினி வான்களுக்குள் ஏற்றி அகதி முகாம்களில் கொண்டு போய் இறக்கிவிட்டார்கள்.

அந்தோ பரிதாபம்! அந்த சிறிய தெருவிலேயே ஏறக்குறைய 30 பேர் ஏற்றப்பட்டதால் பாலனும் அவன் தாயும் ஒரு மினி வானில் ஏற்றப்பட்டு இரத்மலானை அகதிமுகாமிலும், சுரேஷ் வேறு ஒரு மினிவானில் ஏற்றப்பட்டதால் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த அகதிமுகாமிலும் இறக்கப்பட்டார்கள்.

தாய் தந்தையின் அன்பான, பாசமான அரவணைப்பிலேயே அதுநாள்வரை வளர்ந்த ஏழுவயது சுரேஷ் இப்போது அன்பில்லாத, ஆதரவில்லாத, பந்தபாசம் ஏதுமில்லாத வேற்று மனிதர் நடுவே, திக்குத் தெரியாத காட்டின் நடுவே நிற்பது போல் நின்றிருந்தான். மினி வானில் இருந்து அவனை இறக்கிய பொலிஸ்காரர்கள் சரஸ்வதி மண்டபத்தின் நடுவில் அவனை விட்டுவிட்டுப் போய்விட்டனர். முகம் வாடி வதங்கி, கைகால்கள் சோர்ந்த நிலையில், சுரேஷ் அந்த மண்டபத்தின் நடுவில் அமைந்த தூணின் அருகில் சென்று உட்கார்ந்து கொண்டான்.



அவன் உட்கார்ந்து கொண்ட தூணருகே ஒரு தமிழ்க் குடும்பம் இருந்தது. தந்தை, தாய், இரண்டு பிள்ளைகள். அந்த மனிதனின் கண்ணாடி உடைந்து ஒரு பக்க லென்ஸ் மட்டும் கண்ணாடியில் மிச்சமிருந்தது.

அவரது வலது கையை யாரோ கத்தியால் குத்தியதாலோ என்னவோ வலது கையைச் சுற்றி பெரிய கட்டு ஒன்றைப் போட்டிருந்தார். அவர்களும் அவரைப் போலவே உடுத்தியிருந்த உடையுடன் வந்திருந்தார்கள். நல்ல வேளையாக அந்தப் பெண்மணி ஒரு சிறிய உடுப்பு பொட்டலத்தையும், பிள்ளைகள் தாங்கள் படிக்கும் நான்கைந்து புத்தகங்களை ஒரு பையிலும் போட்டுக் கொண்டு வந்திருந்தனர்.

சுரேஷினால்தான் ஒரு உடுப்பையோ அல்லது தன் பாடசாலைப் பையையோ எதையுமே தன்கூட எடுத்துவர முடியவில்லை. "தம்பி இங்கே வா! உன்னுடைய பெயர் என்னப்பா?" அந்த மனிதர் அவனைத் தன்னருகே வருமாறு அழைத்துவிட்டு அவனுடைய பெயரை வினவினார். "என்ர பெயர் சுரேஷ். உங்களின்ர பெயர் என்ன மாமா?" சுரேஷ் தன் பெயரைக் கூறிவிட்டு அவருடைய பெயரை வினவினான்.

"என்ர பெயர் தனபாலசிங்கம். இது என்ர மனைவி கலா. இவே என்ர பிள்ளையள் பிரஷாந்தனும், லதாவும்."

அவரது வலது கையிலிருந்து அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டதாலோ என்னவோ தனபாலசிங்கம் மிகவும் சோர்வாகவே பதிலளித்தார். அதற்குள் அவர் மனைவி கலா, "என்ன தம்பி தனிய வந்து இங்க குந்திக் கொண்டு அழுது கொண்டிருக்கிறாய? எங்க உன்ர அம்மா அப்பா? அவேக்கு என்ன நடந்தது?" என்று அக்கறையோடு விசாரித்தாள்.

"என்ர அப்பா காலையில் பிசினஸ் அலுவலாக வீட்டை விட்டு வெளிக்கிட்டவர் இன்னும் வீடு திரும்பேல்லை. என்ர அம்மாவையும் காணேல்லை. இப்ப எனக்கெண்டு யாரும் இல்லை." இப்படிக் கூறிய சுரேஷின் கண்களில் இருந்து கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டேயிருந்தது.

"அடப் பாவமே, உன்ர நிலமை இப்படியா போகவேணும்?" என்று கலா கவலையுடன் கூறிவிட்டு அந்த சுவரின் ஒரு பக்கமாக உட்கார்ந்து கொண்டாள். சிறிது நேரம் கழித்து யாரோ ஒரு மந்திரியின் தயவில் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. அந்த உணவுப் பொட்டலங்களைப் பெற சனம் அல்லோலகல்லோலப்பட, பின்னர் யாரோ ஒரு பெரியவர் அனைவரையும் வரிசையில் நின்று உணவுப் பொட்டலங்களைப் பெறும்படி சொன்னார்.

பிரஷாந்த், லதாவுடன் சேர்ந்து சுரேஷும் தனது கண்ணீரைத் துடைத்தபடி கியூவில் நின்று உணவுப் பொட்டலத்தைப் பெற்றுக் கொண்டான். தன் இடத்தில் போய் உட்கார்ந்த சுரேஷுக்கு அந்தப் பொட்டலத்திலிருந்த சாப்பாடு பிடிக்கவேயில்லை. தினமும் இரவில் அவன் அம்மா நிலவைக் காட்டி, நட்சத்திரங்களைக் காட்டி உணவு ஊட்டியதற்கும் இப்போது ஒரு அனாதைபோல தன்னந்தனியே அந்தப் பெரிய மண்டபத்தின் நடுவே உட்கார்ந்து சாப்பிடுவதற்கும்தான் எத்தனை வித்தியாசம்!

அவனுடைய சற்றே சூம்பிப்போன இடதுகால் வேறு லேசாக வலித்தது. வீட்டில் என்றால் அம்மா தினமும் இரவில் படுக்கப் போகுமுன் சுடுதண்ணியில் ஒரு வெள்ளைத் துணியை நனைத்து இடதுகாலுக்கு மிக மென்மையாக ஒத்தடம் தருவாள். இங்கு அவனுக்கு யார் ஒத்தடம் தருவார்கள்?

அவனுக்கு தன்னை நினைக்க பரிதாபமாக இருந்தது. அழுகை அழுகையாக வந்தது. அப்படியே அந்த சுவரோரத்தில் வெறும் நிலத்தில் கண்ணீர் வழிந்த கண்களை இறுக மூடிக்கொண்டு உறங்கி விட்டான்.

அடுத்த நாள் காலை எழுந்து காலைக் கடன்களைக் கழிப்பதற்காக கழிவறைகள் இருந்த இடம் நோக்கி நடந்தான் சுரேஷ். ஒவ்வொரு கழிவறையின் வாசலிலும் ஒரு நீண்ட கியூ வரிசை காத்திருந்தது. அந்த வரிசையில் ஒரு நாற்பது பேராவது காத்திருந்தார்கள்.

சற்றே நோகத் தொடங்கிய இடது காலை இழுத்தபடியே சரஸ்வதி மண்டபத்துக்கு வெளியே வந்தான் சுரேஷ். சரஸ்வதி மண்டபம் அகதிகளால் நிரம்பி வழிந்தபடியால் மண்டபத்தைச் சுற்றியுள்ள மைதானத்தின் கரைகளில் குழிகளை வெட்டி நீண்ட தடிகளாலும், பெரிய இலைகளாலும் அந்தக் குழிகளை மறைத்து அவற்றையே கழிப்பறைகளாக மாற்றியிருந்தார்கள்.



சுரேஷும் அந்தக் கழிப்பறைகளில் ஒன்றைப் பாவித்துவிட்டு மற்றொரு நீண்ட கியூவில் நின்று ஒரு காய்ந்த பாண் துண்டையும் தேனீரையும் பெற்றுக் கொண்டான்.

இப்படியே நாலைந்து நாட்கள் இழுபட்டு கலவர நாட்களாகவே கழிந்தன. தினந்தோறும் புதிது புதிதாக மினி பஸ் வண்டிகளில் அகதிகள் வந்து குவிந்துகொண்டேயிருந்தார்கள். எல்லோரது கண்ணீர்க் கதைகளையும், கண்ணீர்க் கறைகளையும் அந்த சரஸ்வதி மண்டபத்தின் சுவர்கள் உள்வாங்கிக் கொண்டன.

ஒவ்வொரு மினி பஸ் வண்டியிலிருந்தும் சனம் வந்திறங்கும் போதெல்லாம் சுரேஷின் கண்கள் மிகுந்த ஆர்வத்துடன் தன் பெற்றோரைத் தேடி அலையும். யார் யாரோ எல்லாம் வந்திறங்கினார்கள்; மண்டபத்தினுள்ளே சென்றார்கள். ஆனால் சுரேஷின் பெற்றோர் மட்டும் வரவேயில்லை!

அன்று ஞாயிற்றுக்கிழமை. சுரேஷ் அந்த மண்டபத்திற்கு வந்து ஆறு நாட்களாகியிருந்தன. அந்த ஞாயிற்றுக்கிழமை முதியோரையும், ஆதரவற்றோரையும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் செல் லும் முதற் கப்பலில் அனுப்பும் ஆயத்தங்களை அரசாங்கம் செய்யத் தொடங்கியது. தனபாலசிங்கம் ஐயா, சுரேஷின் பெயரை ஆதரவற்றோர் பட்டியலில் பதிந்து விட்டிருந்தார்.

சரஸ்வதி மண்டபத்தில் யாழ்ப்பாணத்திற்கு அகதிகளைக் கப்பலில் அனுப்பும் கடமையில் ஈடுபட்டிருந்த சில மனிதர்களின் உதவியின் மூலம் சுரேஷும் கப்பலில் ஏறினான். சரஸ்வதி மண்டபத்திலிருந்து ஒரு பெரிய பஸ் அகதிகளை அடைத்துக் கொண்டு கிளம்பியது. சரஸ்வதி மண்டப வாசலை விட்டு அந்த பஸ் வெளிக்கிட்டதும் அந்த வீதியோர வீடுகளில் வசித்த மக்கள் தங்கள் கைகளை வீசி ஆட்டியபடி "இனிமேல் கொழும்புக்குத் திரும்பி வர வேண்டாம்!" என்று கோஷமிட்டார்கள்.

இந்த மக்கள் திரும்பவும் கொழும்புக்கு வந்து கஷ்டப்பட வேண்டாம் என்ற எண்ணத்தில் அந்த மக்கள் அப்படி கோஷமிட்டிருப்பார்கள் போலும்! பஸ்வண்டி துறைமுகம் நோக்கிச் செல்லச் செல்ல சுரேஷின் கண்கள் வெளியே தெரிந்த காட்சிகளைப் பார்த்துக் கலவரமடைந்தன. பார்க்கக்கூடிய காட்சிகளா அவை? அல்லது கண்டு களிக்கக்கூடிய காட்சிகளா அவை? பற்பல கட்டிடங்கள், வீதியோரக் கடைகள், சினிமாத்

தியேட்டர்கள், தமிழரின் வீடுகள் எல்லாமே தீக்கிரையாக்கப்பட்டிருந்தன. எத்தனையோ மனிதர்கள் உயிருடன் கொளுத்தப்பட்டார்கள் என்று அந்த பஸ்வண்டியில் மக்கள் பேசிக் கொண்டார்கள்.

இப்படியே அந்த பஸ்வண்டி கொழும்புத் துறைமுகத்தை வந்து சேர்ந்தது. அந்தத் துறைமுகத்தில் மிகப்பெரிய கப்பல் ஒன்று, உற்றார் பெற்றோர், வீடுவாசல் அனைத்தையுமே இழந்த இந்த அகதிகளை யாழ்ப்பாணத்திற்கு ஏற்றிச் செல்வதற்காகக் காத்திருந்தது. மூட்டை முடிச்சுகளோடு கண்ணீரும் கம்பலையுமாக அந்த பரிதாபத்திற்குரிய மக்கள் ஒவ்வொருவராக அந்தக் கப்பலில் ஏறத் தொடங்கினார்கள். அதுநாள் வரை வீட்டிலிருந்து சிறிது தூரம் வெளியே செல்வதென்றால் கூட தன் பொற்றோரின் கைளைப் பிடித்தபடி மான்போல் துள்ளிக் குதித்தபடி செல்லும் சுரேஷ் இன்று யாருமேயில்லாத அனாதையாய் தன்னந்தனியாக 'குபுக்'கென்று பொங்கிவரும் கண்ணீரைத் துடைக்கக் கூடத் தோன்றாமல் அந்தக் கப்பலினுள் காலடி எடுத்து வைத்தான்.

எல்லா அகதிகளும் ஏறிமுடிக்கவே சிலமணி நேரங்கள் எடுத்தன. மக்கள் ஏறிமுடிந்ததும் அந்தக் கப்பல் மெல்ல மெல்ல ஆடி அசைந்தபடி யாழ்ப்பாணத்தை நோக்கிய தன் பயணத்தை மெதுவாகத் தொடங்கியது. மூன்று தளங்கள் கொண்ட அந்தக் கப்பலின் அடித்தளத்தை அடையவே எல்லோரும் சிரமப்பட்டார்கள். அறுபது அல்லது எழுபது படிகளில் மெல்ல மெல்ல கால் வைத்தபடி இறங்கிய சுரேஷ், அடித்தளத்தை அடைந்தான். தாங்கள் கொண்டு வந்த சேலையையோ, வேட்டியையோ, துவாயையோ கீழே நிலத்தில், அந்த கட்டாந்தரையில் போட்டுவிட்டு பலர் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

சுரேஷின் கையில் ஒரு துணிப் பொட்டலம் கூட இல்லை. மெல்ல தன் அருகில் இருந்தவரிடம் "ஐயா, எனக்கு ஒரு சின்னத் துண்டு தாங்கோ! இந்த நிலத்தில் போட்டுப் படுக்கிறதுக்கு" என்று கெஞ்சிக் கேட்டான். அவனின் கலங்கிய முகத்தையும், வாடிய தோற்றத்தையும், கிழிந்த மேற்சட்டையையும் கண்டு இரக்கப்பட்ட அந்த மனிதர், "இந்தா தம்பி! இதை நிலத்தில் போட்டுவிட்டுப் படு" என்று தன் பழைய வேட்டி ஒன்றை எடுத்துக் கொடுத்தார்.

சுரேஷ் அந்த மனிதருக்கு நன்றி கூறிவிட்டு அந்த பழைய வேட்டியை நிலத்தில் போட்டுவிட்டு தூங்கத் தொடங்கினான். எத்தனை மணிநேரம் தொடர்ந்து தூங்கினான்?



"தம்பி எழும்பு! நாங்கள் எல்லோரும் இறங்க வேண்டிய காங்கேசன் துறைமுகம் வந்திட்டுது. எழும்பி என்னோடை மேலே வா!" கரிசனம் மிக்க அந்தக் குரலைக் கேட்டு எழுந்த சுரேஷ், அந்தப் பெரியவரின் துணையோடு மேலே வந்தான்.

கப்பல் கரை தட்டி நின்றது. ஒவ்வொருவரும் தங்கள் மூட்டை முடிச்சுகளோடு கப்பலைவிட்டு இறங்கினார்கள். தங்கள் சொந்த மண்ணிலேயே அவர்கள் வீடு, சொத்து, சுகம் அத்தனையையும் இழந்த அகதிகளாய் இறங்கினார்கள். அந்த காங்கேசன்துறை மண்ணுக்கு மட்டும் வாயிருந்தால் தன் மேல் கால் பதித்த அத்தனை அகதிகளின் துன்பக்கதைகளையும், துயரக் கதைகளையும் சொல்லிச் சொல்லி அழுதிருக்கும்! அத்தனை அகதிகளின் கண்ணீரும் அந்தக் கடலுடன் சேர்ந்தால் நிச்சயம் வெள்ளம்தான் கரைபுரண்டு ஓடும்.

காங்கேசன் துறைமுகத்தில் இறங்கிய அகதிகள் எல்லோருக்கும் நெல்லி கிரஷ்ஷூம், உணவும் வழங்கப்பட்டன. அதன்பின் உற்றார், உறவினர் உள்ளவர்கள் அவர்கள் வீடு நோக்கிக் கிளம்பினார்கள். கப்பலில் இருந்து இறங்கும்போது சுரேஷை அடையாளம் கண்டு கொண்ட அவனது தூரத்து உறவினர் ஒருவர் சுரேஷை, தானே பொறுப்பெடுத்து யாழ்ப்பாணத்தில் நல்லூரடியில் இருந்த அவனது பெரியம்மா, பெரியப்பாவிடம் ஒப்படைத்தார்.

தாய் தந்தையரைப் பிரிந்த ஏக்கம் அவன் கண்களில் படிந்திருக்க, அவர்களைப் பிரிந்த சோகம் முகம் முழுவதும் அப்பியிருக்க அவன் தன் பெரியம்மாவை நோக்கி ஓடிச்சென்று அவளை அணைத்துக் கொண்டான். பெரியம்மாவை அணைத்தபடி வெகுநேரம் விம்மிக் கொண்டேயிருந்தான்.

அவனது பெரியப்பா கந்தசாமியும், பெரியம்மா ராசாத்தியும் அன்பு மிக்கவர்கள். கருணை உள்ளம் கொண்டவர்கள். கனிவு மிக்கவர்கள். அவர்களுக்கொரு மகன் இருந்தான். அவனின் பெயர் கண்ணன், பெயருக்கேற்றபடி குறும்புமிக்கவன். கண்ணனுக்கு ஏறக்குறைய பதினொரு வயதாகியிருந்தது. சுரேஷின் பெரியம்மா ராசாத்தியும் சுரேஷைக் குளிப்பாட்டி கண்ணனின் பழைய உடைகளைப் போட்டுவிட்டு அவனுக்கு உணவு ஊட்டி அவனைத் தன்னுடன் படுக்கைக்கு அழைத்துச் சென்றாள்.

சுரேஷ் வந்த முதல் நாளே 'தன் தாய் தன்னைக் கவனிக்காமல் சுரேஷுக்கு மொத்த அன்பையும் அள்ளி அள்ளி அளிக்கிறாளே' என்கிற மனவருத்தம் கண்ணனுக்கு ஏற்பட்டது. 'இருக்கட்டும், இருக்கட்டும். இவன் சுரேஷை நான் கவனிக்கிற மாதிரி கவனிக்கிறன்!' என்று தனக்குள் கறுவிக் கொண்டான் கண்ணன்.

அடுத்து வந்த சில நாட்களில் நல்லூரடியில் இருந்த பாடசாலை ஒன்றில் சுரேஷை அவனது பெரியம்மா சேர்த்து விட்டாள். அத்தோடு சுரேஷுக்கு புது உடைகள், புதுப் புத்தகங்கள், புதுப் புத்தகப்பை, புது பென்சில், புது றப்பர் எல்லாம் வாங்கிக் கொடுத்தாள். இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த கண்ணனுக்கு எரிச்சலால் அவனது வயிறு, இதயம் எல்லாம் எரிந்தது. கண்களில் பொறாமை பொங்கிப் பொங்கி வழிந்தது. அன்று சுரேஷுக்கு பாடசாலையில் முதல் நாள். கண்ணனை அழைத்த அவன் தந்தை "டேய் கண்ணா! தம்பி சுரேஷையும் உன்னோட சேர்த்து கவனமாகப் பள்ளிக்கூடத்திற்கு கூட்டிட்டுப் போய் வாடா!" என்றார்.

"அதுக்கென்னப்பா நான் நல்லபடி கூட்டிட்டுப் போய் வாறன்" என்று பணிவாக பதில் சொன்னான் கண்ணன். வாய் பணிவாகப் பதில் சொன்னாலும் அவனது மூளை வேறொரு திட்டத்தைத் தீட்டிக் கொண்டிருந்தது. அடுத்த நாள் காலை நல்ல பிள்ளைபோல் கண்ணன் சுரேஷையும் அழைத்துக் கொண்டு பள்ளிக்கூடத்திற்குக் கிளம்பினான். சுரேஷ் தனது இடதுகாலை இழுத்தபடியே மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தான். கண்ணனும் அவனுடைய நண்பர்கள் சிலரும் "ஏய் நொண்டி கொஞ்சம் கெதியா வாடா! பள்ளிக்கூடம் தொடங்கப் போகுது! மணி அடிக்கப் போறாங்கள்" என்று சுரேஷை அவசரப்படுத்தினார்கள்.

கண்ணனும் அவனது நண்பர்களும் தன் இயலாமையை கேலி செய்வதை உணர்ந்து சுரேஷ் ரோஷத்துடன்,

"ஏன் கண்ணன் அண்ணா நான் உங்களின்ரை தம்பி இல்லை? நீங்களே என்னை பகிடி பண்ணலாமா?" என்று கேட்டுவிட்டு விசும்பத் தொடங்கினான்.

"டேய் சுரேஷ்! நல்லாய் கேட்டுக் கொள்ளு! அண்ணன் தம்பி பாசமெல்லாம் வீட்டில்தான். றோட்டில் நீ யாரோ நான் யாரோ. சரியா? மற்றது, நானும் நண்பர்களும் உன்னைப் பகிடி பண்ற விஷயம்



வீட்டுக்குத் தெரியக் கூடாது, சரியோ! தெரிஞ்சா நடக்கிற கதையே வேறதான்!" தன் எரிச்சல் தணிய கண்ணன் சுரேஷை நன்றாகத் திட்டி விட்டான்.

ஒரு மாதிரி சுரேஷ் அன்று பள்ளிக்கூடம் போய்ச் சேர்ந்தான். இப்படியே அடுத்து வந்த சில நாட்களும் கழிந்தன. கண்ணனின் சேட்டைகள் வீட்டிலும் தொடர்ந்தன. சுரேஷின் புத்தகங்கள், பென்சில், அழிறப்பர் போன்றவற்றை ஒளித்து வைத்து விடுவான். சுரேஷை நன்கு அழவிட்டு விட்டு அதில் குரூர திருப்தி அடைவான். பின்னர் சுரேஷினது பொருட்களை அவனிடம் கொடுப்பான்.

கண்ணனிடம் ஜிம்மி என்ற நாய் இருந்தது. சுரேஷை தன் நாயருகிலேயே போகவிட மாட்டான். சுரேஷ்தான் "கண்ணன் அண்ணா, என்னிட்டை உங்களின்ரை ஜிம்மியைக் கொஞ்சம் தாங்க. விளையாட்டுக் காட்டிட்டு தாறன்" என்று கெஞ்சுவான் "சீ, சீ போ அங்காலை. டேய் சுரேஷ், நான் என்ர நாய்க்குட்டியை ஏன் உன்னிட்டை தரோணும். அதெல்லாம் தர இயலாது. அம்மா, அப்பாவை முழுங்கிட்டு இங்க வந்து முழிச்சிட்டு நிற்கிறான் பார்!" என்று கண்ணன் கோபத்துடன் திட்டி விட்டான்.

தன் தாய் தந்தையரை கண்ணன் நினைவுபடுத்தியதும் அதுவரை அடக்கி வைத்திருந்த துன்பம், துயரம் எல்லாம் கண்கள் வழியாக கண்ணீராக வெடித்துச் சிதற "கோ" என்று கதறியபடி தன் படுக்கையில் ஓடிப்போய் படுத்து விட்டான் சுரேஷ்.

அடுத்தநாள் பாடசாலை முடிந்ததும் மிகுந்த களைப்புடன் அப்படியே கட்டிலில் ஏறிப் படுத்துவிட்டான். உடம்பு அனலாய்க் கொதித்தது. அவனது வாய் "அம்மா, அம்மா" எனப் பிதற்றியது. சுரேஷ் சாப்பிட வராததால் அவனைத் தேடி வந்த பெரியம்மா சுரேஷ் படும் பாட்டைப் பார்த்து பயந்து போனாள்.

"சோறு வேண்டாம்" என்று மறுத்த சுரேஷுக்கு கஞ்சி கொண்டு வந்து கொடுத்தாள். அடுத்த நாள் காலை அவனது உடலெங்கும் கொப்புளங்கள் காட்சியளித்தன. அவனுக்கு வந்திருப்பது கொப்புளிப்பான் என அவனது பெரியம்மா புரிந்து கொண்டாள். மிகுந்த கவனமெடுத்து அவனைக் கவனித்துக் கொண்டாள்.

கண்ணனுக்கும் சுரேஷைப் பார்க்க பாவமாயிருந்தது. அவ்வப்போது சுரேஷிற்கு கஞ்சி கொண்டுவந்து கொடுப்பான். சில வேளைகளில் சுரேஷிற்கு சோறு சாப்பிட சிரமமாயிருந்ததால் சோற்றை ஊட்டி விடுவான்.

"டேய் சுரேஷ்! உனக்கு குணமானவுடன் நீயும் ஜிம்மியும் சேர்ந்து விளையாடலாம். நானும் என்ர பிரெண்ட்ஸும் உன்னை இனி நொண்டி எண்டு கூப்பிட மாட்டோம். இவ்வளவு நாளும் உன்ர மனம் வருந்துற மாதிரி நாங்க நடந்திருந்தா எங்களை மன்னிச்சிடு!" என்று கண்ணன் கூறி முடித்தான்.


கண்ணனின் மனமாற்றத்தைப் புரிந்துகொண்ட சுரேஷின் உள்ளத்தில் உவகை வெள்ளம் ஊற்றெடுத்தது. அவனது மனதெல்லாம் பூரித்து குளிர்ந்து போயிற்று. அவனது கொப்புளிப்பான் வருத்தம் பூரண குணமடைந்ததும் அன்று அவனது பெரியப்பா, பெரியம்மா, கண்ணன், சுரேஷ் எல்லோரும் அருகில் உள்ள அம்மன் கோயிலுக்குச் சென்று வழிபட்டனர்.

"அம்பாளே! என்ர அம்மா, அப்பாவை என்ர வாழ்நாளில் இனிக் காணமுடியுமோ தெரியாது! ஆனா எனக்கு இப்ப கிடைச்சிருக்கிற நல்ல பெரியம்மா, பெரியப்பா, கண்ணன் அண்ணாவோட இனி நான் சந்தோஷமாக வாழ வேண்டும்."

இப்படி சுரேஷ் அன்று கோயிலில் கும்பிட்டான். கோயிலில் கும்பிட்டு முடித்துவிட்டு சுரேஷ் பெரியம்மாவின் ஒரு கையையும் கண்ணனின் ஒரு கையையும் பிடித்துக் கொண்டு சந்தோஷமாக வீடு திரும்பத் தொடங்கினான். சந்திரன் வானவீதியில் பவனிவரத்துவங்க, சில மல்லிகைச் செடிகள் அவர்களை வாழ்த்துவது போல மல்லிகை மலர்களை பூமியில் உதிர்க்கத் தொடங்கின. ✽



# சங்கமம் 2



சாயிசசி

ரம்யாவுடன் விரிவுரையாளராகப் பணியாற்றும் நீலகண்டன் குடும்பத்தினருடன் அனுமான் காட்டில் இருந்தார். நீலகண்டனின் பெற்றோர் சென்னையைச் சேர்ந்தவர்கள்தானாம். பல வருடங்களாக காசியில் வசிக்கிறார்கள். காசி நகர வீதிகள் மிகவும் குறுகலாக இருக்கும். இந்து கலாச்சாரம் அங்கு இன்றும் அப்படியே பேணப்படுகிறது எனலாம். ஒவ்வொரு வீட்டு வாசலிலும் மாக்கோலங்கள் வரவேற்கும். அங்கே வீதிகளில் பசு மாடுகளுக்குத்தான் முதலிடம். அவை தம் போக்கில் போய்க் கொண்டிருக்கும். வாகனங்கள் அவற்றை விலத்தித்தான் போக வேண்டும். பசுக்களை யாரும் எதுவும் கூறமாட்டார்கள். மிக்க அன்புடனும் பக்திபூர்வமாகவும்

வணங்குவார்கள். மரக்கறி விற்பவர்கள் பசுவைக் கண்டால் ஒரு கீரைக்கட்டை எடுத்து நீட்டுவார்கள். அதேபோல குரங்குகளையும் ஒன்றும் செய்யமாட்டார்கள். ஆஞ்சனேயராகவே போற்றி வணங்குவார்கள். காசியில் ஏறத்தாழ ஒரு லட்சம் சிவலிங்கங்கள் இருப்பதாகக் கூறுகின்றார்கள்.

காசிப்பட்டணத்தையே கோவிலாகக் கருதினால் அங்கு இரவும் பகலும் மணி ஓசை கேட்டுக்கொண்டே இருக்கும். ஒவ்வொரு காட்டிலும் பல கோவில்கள் - சிறியதும் பெரியதுமாக உள்ளன. அனுமான் காட்டில் காமகோடீஸ்வரர், சக்கரலிங்கேஸ்வரர், ஆஞ்சனேயர், பைரவர் போன்ற ஆலயங்கள் அமைந்துள்ளன. அங்கே மந்த்ராலயம் ஸ்ரீராகவேந்திர சுவாமிகள் பிருந்தாவனம் ஒன்றும் அமைந்துள்ளது. காசி யாத்திரை செல்பவர்கள் முக்கியமான சில ஆலயங்களுக்கு மட்டுமே செல்வார்கள். அனைத்தையும் தரிசிக்க வேண்டுமென்றால் அங்கேயே சில மாதங்கள் தங்கவேண்டி இருக்கும்.

காமகோடீஸ்வரர் ஆலயத்தை வலம் வரும்போது அதன் தென்மேற்கு வீதியில் சிவசயன மூர்த்தியைத் தரிசிக்கலாம். நஞ்சுண்ட நீலகண்டப் பெருமான் ஆயாசமுற்று தேவியின் மடியில் இளைப்பாறும் அபூர்வக் காட்சி மிகவும் தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது.

மனோகர் மாலையில் காலார நடந்து அனுமான் காட் படிகளில் இறங்கிப் போய் கங்கை அன்னையைத் தரிசித்தான். அப்போது அங்கே வந்த ஒருவர் "நீங்கள் நீலகண்டனின் விருந்தாளியா? இப்போது அன்னைக்கு ஆரத்தி நடக்கும். வாருங்கள் போய்ப் பார்ப்போம்" என அங்கிருந்த ஒரு படகை அமர்த்தி அவனை அழைத்துச் சென்றார். சுமார் ஆறரை மணிக்கு கங்கை அன்னைக்கு நடக்கும் ஆரத்தியைக் கண்டு களிக்க வெளிநாட்ட வரும் சுற்றுலாப் பயணிகளுமாகப் படகுகளில் வந்து குவிந்தனர். அங்கே படகுகளில் தீபம் விற்கும் சிறுவர்கள் வில்வ இலைகள், மலர்களுடன் ஒரு தீபத்தையும் வைத்து விற்பனை செய்தனர். அதை வாங்கி ஆரத்தி நடக்கும் போது பக்தர்கள் பிரார்த்தித்து கங்கையில் விடுவார்கள். வரிசை வரிசையாக தீபங்கள் நீரில் மிதக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக மிகவும் பரவசமூட்டுவதாக இருக்கும். அது மட்டுமா. அன்னையின் அந்த ஆரத்தியைக் காணக் கண்கோடி வேண்டும். மனோகர் மெய் மறந்து நின்றான். இங்குள்ளவர்கள் அதிர்ஷ்ட சாலிகள் என அவன் வாய் முனகியது. அதைக் கேட்ட கேதார் "அவரவர்களுக்கும் அவர வர் சோலி. எங்கே வர நேரம் கிடைக்கும்" என்றார்.



கேதார் நல்ல நண்பராகத் தெரிந்தார். "நீலகண்டன் சொன்னான் தன் ஆத்துக்கு விருந்தாளி வருவதாக. நீங்கள் ரம்யா பொண்ணுடன் வந்தீர்களா? அது மிக நல்ல பொண்ணு. இங்கிருக்கும்போது நம்ம பசங்களுக்கெல்லாம் பாடம் சொல்லிக் கொடுக்கும். நீங்கள் நாளை அதிகாலையில் வாங்கோ. சூரிய உதயம் மிக ரம்மியமாக இருக்கும். அப்படியே கங்கையில் ஒரு போட்டிங் போய் எல்லாத் தீர்த்தங்களையும் பார்க்கலாம். பிறகு விஸ்வநாதருக்குப் பாலாபிசேகம் செய்யலாம். அதற்கும் ஒழுங்கு செய்கிறேன். நீலகண்டன் 'யூனிவர்ஸிட்டிக்குப் போக வேணும். நேரமிருக்காது. ஒருக்காப் பார்த்துக்க அண்ணா' என்று சொன்னான். இப்ப பத்திரமா ஆத்துக்குப் போங்கோ" என அனுப்பி வைத்தார்.

நல்ல காலம் மனோகர் எனப் பெயர் வைத்தது. முகுந்தன், கோவிந்தன் என்றால் ஐயங்கார் குட்டு வெளியாகியிருக்கும் என நினைத்துச் சிரித்துக்கொண்டே போனான். அங்கே நீலகண்டன் "கேதார் அண்ணாவைப் பார்த்தீர்களா. நான் அவரிடம் எல்லாம் சொல்லியிருக்கிறேன். ரம்யாவும் நீங்களும் இங்கே சுத்துவது அவ்வளவு நல்லதல்ல" எனச் சொன்னார். மனோகருக்கு அனைத்தும் புரிந்தது. இது பாரிஸ் நகரமல்ல. சென்னையுமல்ல. இந்து சமயத்தின் பிறப்பிடம். அது அப் படியே வாழும். இடம். பண்பாடுகளும் அப்படியே பேணப்படுகின்றன. நாமும் அதை மதித்துக் கவனமாக இருக்க வேண்டுமென நினைத்துக் கொண்டான்.

கேதார் சொன்னது போல் மறுநாள் அதிகாலை பப்புலு என்ற அவரது உதவியாளரை அனுப்பியிருந்தார். பப்புலு என்றால் என்ன எனக் கேட்டதற்கு, எருது, அதாவது சிவனின் வாகனம் எனச் சொன்னான். அவனது தாய்மொழி ஹிந்தி. ஆனால் நன்றாகத் தமிழ் பேசினான். மணிகர்ணிகா காட்டில் நீராடும்போது "காசியில் கோடி தீர்த்தங்கள் உள்ளன. ஆனால் இந்த மணிகர்ணிகையில் நீராடினால் எல்லாத் தீர்த்தங்களிலும் நீராடிய பலன் உண்டு என்பார்கள். இங்கே விஸ்வநாதர் ஆலயத்திற்கு அருகே சக்கரதீர்த்தம் இருக்கிறது. திருமால் தன் சக்கரத்தைக் கொண்டு அதை வெட்டினார். அவர் சரீரத்திலிருந்து பெருகிய நீர் அக்குளத்தில் நிறைந்து சக்கர தீர்த்தமாகியது. அங்கும் நீராடலாம். காசியில் மணிகர்ணிகை ஸ்நானமும் விஸ்வநாதர், விசாலாட்சி, அன்னபூரணி தரிசனமும் மிகவும் அவசியமாகச் செய்ய வேண்டியவை. மற்றவை அவரவர் வசதி போலச் செய்யலாம்" எனக் கூறினான்.

நீராடி உடைமாற்றிக் கொண்டு சூரிய உதயம் பார்க்கச் சென்றனர். அதற்கும் பல படகு

களில் சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தனர். கீழ்த்திசையிலிருந்து சூரியன் மெதுவாக எழுந்து வருவதைப் பார்க்க மிகவும் அற்புதமாக இருந்தது. சூரிய பகவானும் தோன்றிய பின் மேக மூட்டத்திற்குள் மறைந்து போக்குக் காட்டி எங்கே! எங்கே! என மக்களின் ஆர்வத்தைத் தூண்டிய பின் மெதுவாகக் கீழத்திசை வானில் தோன்றினான். மனோகர் தன்னை அறியாமலே "பாஸ்கராய வித்மஹே - மஹாத் த்யுதிகாராய தீமஹி தந்நோ ஆதித்ய: ப்ரசோதயாத்" எனச் சூரிய காயத்ரியைக் கூறி வணங்கினான்.

அதன்பின் திட்டமிட்டபடி அஸி காட்டிலிருந்து படகுச் சுற்றுலா ஆரம்பித்தது. கங்கைக் கரையிலிருந்து சுமார் நூறடி தொலைவில் படகு மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. படகிலமர்ந்து கங்கைக் கரையிலிருக்கும் ஒவ்வொரு நீராடு துறையாகப் பார்த்துக் கொண்டு போகும்போது மனோகருக்கு மிகவும் ஆனந்தமாக இருந்தது. சீரான படிக்கட்டுகளும் வானுயர் கோபுரங்களும், சிறு சிறு கோவில்களும் ஆங்காங்கே நீராடுபவர்களும் படகுச் சவாரி செய்பவர்களும், பிரார்த்தனைகள், பூசைகள் செய்வோரின் மந்திர கோஷங்களுமாக அவனைப் புதியதோர் உலகுக்கு அழைத்துச் சென்றது. இடையே உறவினர்கள் இறந்தவரின் பிணங்களைத் தகனம் செய்வதையும் காணக்கூடியதாக இருந்தது. இது தினமும் நடக்கும் காட்சி எனப் பப்புலு சொன்னான். படகில் சவாரி செய்வோரின் ஆரவாரமும் ஆங்காங்கே கேட்கும் மந்திர ஒலிகளும் ஒரு கோவில் திருவிழாவில் நிற்பது போன்ற ஓர் புனித உணர்வை மனோகருக்கு ஏற்படுத்தியது.

படகில் இருந்துகொண்டே ஒவ்வொரு படிகளின் பெயர்களையும் படிக்கக் கூடியதாக இருந்தது. படகுக்காரனும் மனப்பாடமாகவே ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டு போனதால் எழுத்தில் இல்லாதவற்றை அவன் வாய் வழியாகக் கேட்கமுடிந்தது.

தசாச்வமேதகட்டமும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. பிரும்மா பத்து அஸ்வமேத யாகங்கள் செய்த இடமென்று படகோட்டி கூறினான். அங்கே மந்திர கோஷம் ஒலித்தது. இங்குதான் மாலையில் ஆரத்தியும் நடக்கும். இதுவும் ஒரு முக்கிய நீராடு துறையாகும். முக்கியமாகக் கிரகண நாட்களில் இங்கே கூட்டம் நிறைந்து வழியுமாம். அங்கே நீருக்குள் சரிந்த நிலையில் உள்ள ஒரு தேரைக் காணலாம். அது ஆதி காலத்திலிருந்தே இருப்பதாகக் கூறினர். இங்கும் ஈமக்கிரியைகள் செய்வது சிறப்பாகும்.

கணேஷ் காட், ராம் காட் என ஒவ்வொன்றாகக் கடந்து பஞ்ச



கங்கா காட்டை அடைந்தனர். இது கங்கையுடன் வேறு நான்கு நதிகள் சேரும் புனிதகட்டம். ஏற்கனவே திரிவேணி சங்கமத்தில் யமுனையும் சரஸ்வதியும் கலந்து விடுகின்றன. இங்கே தூத்பாபா, கினா என்ற கண்ணுக்குத் தெரியாத இரு நதிகள் சேருகின்றனவாம். இந்தப் பஞ்சகங்கா காட்டில் நீராடுவதும் மிகவும் உன்னதமாகக் கொள்ளப்படுகிறது. அதற்கடுத்து துர்க்கா காட், ராஜ்காட் எனப் பார்த்துக்கொண்டே போனால் கடைசியாக வருவது வருணை காட். வருணை நதியும் கங்கையும் சங்கமமாகும் இடம்.

இறந்த மூதாதையருக்குத் திதி கொடுத்து, பிண்டம் போடுபவர்கள் புரோகிதருடன் ஒரு படகை அமர்த்திக்கொண்டு அஸி சங்கமம், தசாச்வமேதம், மணிகர்ணிகா, பஞ்சகங்கா, வருணா சங்கமம் ஆகிய ஐந்து கட்டங்களுக்கு வந்து நீராடிப் பிண்டம் போட்டுப் பிறகு காரியங்கள் செய்வது சிறப்பானதாகும் எனப் படகோட்டி கூறினான். ஆனால் இங்குள்ள சில புரோகிதர்கள் சோம்பல் பட்டு ஒன்றிரண்டு கட்டிலேயே அனைத்தையும் முடித்துப் பணத்தை வாங்கிக்கொண்டு போய் விடுவார்கள். ஆனால் நம்ம கேதார் அண்ணா எல்லாம் முறையாகச் செய்வார் எனப் பப்புலு சொன்னான்.

ரம்யா பிரபல ஆன்மிகச் சுற்றுலா எழுத்தாளர் திரு. பரணிதரன் எழுதிய "காசி ராமேஸ்வர யாத்திரை" என்ற புத்தகத்தை நீலகண்டனின் புத்தக அலமாரியில் கண்டெடுத்து மனோகரிடம் கொடுத்தாள். அதை வாசிக்க மனோகருக்கு காசி யாத்திரை பற்றி மேலும் பல விபரங்கள் புரிந்தன. நம் நாட்டின் இந்த அற்புதத்தைப் பார்க்காமல் எங்கோ போய் லூர்ட்ஸைப் பார்த்து வியந்தோமே என மனோகர் ரம்யாவிடம் வேடிக்கையாகச் சொன்னான். சந்தேகம் இல்லாமல் லூர்ட்ஸும் ஓர் அற்புதம்தான் என ரம்யா ஆணித்தரமாகக் கூறினாள்.

மறுநாள் அதிகாலையில் காசி விஸ்வநாதர் ஆலயத்திற்குச் சென்று அங்குள்ள ஜோதிர் லிங்கத்திற்குப் பாலால் அபிஷேகம் செய்தனர். அந்த ஜோதிர் லிங்கத்தைக் கட்டித் தழுவி வணங்கிப் பூஜிக்கும்போது பேரின்பமாக இருந்தது. தன்னுடன் ரம்யா இல்லையே என மனோகருக்கு வருத்தமாக இருந்தது. இனி இங்குதானே இருக்கப் போகிறோம். இன்னொரு தடவை வந்தால் போகிறது எனத் தனக்குத் தானே ஆறுதல் சொல்லிக் கொண்டான். அதிகாலையில் போனதால் விஸ்வநாத லிங்கத்தின் முழு உருவத்தையும் காண முடிந்தது. தாமதமானால் அடியார்கள் செய்யும் அபிஷேகத்

தால் நிறைந்து லிங்கம் அரைவாசிக்கு மேல் மறைந்துவிடும் எனப் பப்புலு சொன்னான். அங்கிருந்து அன்னை விசாலாட்சியையும் அன்னபூரணியையும், காலபைரவரையும் தரிசித்தனர்.

அனுமான் காட்டிலிருந்து இந்துப்பல்கலைக்கழகம்செல்லும் வழியில் மிகவும் மகிமை வாய்ந்த சங்கடஹர ஆஞ்சனேயரைத் தரிசித்துக்கொண்டு வளாகத்துள் சென்றனர். அங்கே ரம்யா வரவேற்று அங்குள்ள கல்விப் பகுதிகளையும் அங்கே அமைந்துள்ள பிர்லா மந்திர் என்ற பளிங்குக் கற் களால் அமைந்த புதிய விஸ்வ நாதர் ஆலயத்தையும் காட்டினாள். மாணவர்கள் மட்டுமன்றிப் பொது மக்களும் அங்கு பிரார்த்தனைக்கு எதுவித தடையுமின்றி அனுமதிக்கப்படுகின்றனர். இந்தப் பல்கலைக்கழகத்தில் மொத்தம் நாற்பது பிரிவுகள் உள்ளன. உள்ளே போனால் ஒரு புதிய நகரத்துள் காலடி எடுத்து வைத்தது போல இருக்கும். ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் இது பரந்துள்ளது. அங்கு பழைய வேத சாத்திரங்கள் முதல் புதிய விஞ்ஞான ஆராய்ச்சி வரை அனைத்திலும் பயிற்சி அளிக்கப்படுவதை மனோகர் கவனித்தான்.

அங்கிருந்து திரும்பும்போது ஒரு புதிய கட்டிடமான துளசி மானஸ மந்திர் சென்றார்கள். இங்கே துளசி ராமாயணம் பொம்மை உருவாகச் செய்யப்பட்டிக்கிறது. இவை மின் விசையால் அசையும் பொம்மைகள். உதாரணமாக சீதா கையில் மாலையுடன் மெதுவாக நடந்து வந்து ராமா பொம்மைக்கு மாலை அணிவிப்பதைப் பார்க்கலாம். இன்னும் பலப்பல அரிய காட்சிகள் அங்கே சித்தரிக்கப்பட்டுள்ளன. அதற்கு அருகில் ஒரு துர்க்கா ஆலயம் இருக்கிறது. அதையும் தரிசித்தனர்.

கடைசியாக ஒரு சிறு ஆலயமான கௌடி மாதா ஆலயத்திற்குச் சென்றனர். கிராமப்புறம் போன்ற இடத்தில் ஒரு சிறு தனிக் கோவிலாக அமைந்துள்ளது. காசிக்கு வருபவர்கள் கடைசியாக இந்த அம்மனைத் தரிசித்துச் சோழிகளைப் போட்டு வணங்கி "காசியில் கும்பிட்ட பலன் எனக்கு, சோழிகள் உனக்கு" எனச் சொல்லிக் கும்பிட வேண்டுமாம். அங்குள்ள பூசாரி சோழிகளைக் கையில் கொடுத்து ஹிந்தியில் "காசி பலம் ஹம்கோ, கௌடீ பலம் தும்கோ" என்று சொல்லி சோழிகளை அம்மன் பாதத்தில் போட்டு வணங்கச் சொல்வார்.

கௌடீ மாதாவுடன் காசி தரிசனத்தை நிறைவு செய்து கொண்டு மறுநாள் சாரனாத் சென்றனர். அது அங்கிருந்து சுமார் பத்துக் கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது. அங்கே ஒரு மியூஸியமும், புத்த விகாரையும் பார்த்தனர். புத்தபெருமான் கயாவில் ஞானம் பெற்றபின் காசியில் வந்து உபதேசம் செய்ததாக அங்குள்ள ஆவணங்கள் கூறின. இங்கே அசோக மன்னன் அமைத்த ஓர் அசோகச் சக்கரம் இருந்ததாம் கால வெள்ளத்தில் அழிந்து, அதன் துண்டுகள் அந்த அரும்பொருட்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

கயாவுக்கும் பிரயாகைக்கும் போகலாம் எனக் கேதார் சொன்னார். மனோவுக்கு ரம்யாவை விட்டுப் போக மனமில்லாததால் நீலகண்டனும், மனைவியும் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர்.

கயா பீகார் மாநிலத்தில் இருக்கிறது. காசியிலிருந்து ஏறத்தாழ 450 கிலோமீட்டர் தூரம். கயாவுக்குச் செல்லும் வழியில் தான் புத்த கயா இருக்கிறது. எல்லோரும் கயா என்றால் அதைத்தான் நினைப்பார்கள். ஆனால் அங்கிருந்து சுமார் முப்பது கிலோமீட்டர் தூரத்தில்தான் இந்த கயா உள்ளது. புத்தகயா ஓர் உலகப் புனிதத் தலமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. புத்த பெருமான் அமர்ந்திருந்து ஞானம் பெற்ற போதி மரத்தைத் தரிசிக்கும் பாக்கியத்தை அனைவரும் பெற்றனர். அங்கிருந்து சிறிது தொலைவில் அக்ஷய வடம் என்ற ஆல மரம் உள்ளது. அந்த மரத்தின் மூலவேர் பிரயாகையிலும் நடுப்



பகுதி காசியிலும் இருப்பதாக ஐதீகம்.

கயாவில் இருப்பது மஹாவிஷ்ணுவின் பாதம். அதற்கு ஒரு புராணக் கதையை அங்குள்ளவர்கள் கூறினர். கிருத யுகத்தில் கயாசுரன் என்ற அசுரன் சிவபெருமானிடம் பெற்ற வரத்தால் அவனைப்பார்ப்பவர்களும்தொடுபவர்களும் உடனே வைகுந்தம் சென்றனர். அதனால் பூலோகத்தில் மனிதர்களே இல்லாமல் போய்விட்டனர். அதைத் தடுப்பதற்காக மஹாவிஷ்ணு தந்திரத்தால் அவனைத் தன் பாதங்களால் அழுத்திப் பூமிக்குள் புதைத்தாராம். விஷ்ணு பாதம் பட்டதால் கயாசுரன் புனிதமாகிவிட்டான். அவன் பெற்ற வரத்தால் கயாவில் வந்து பிதிர் தானம் செய்தால் அந்த ஆத்மா மோட்சத்தை அடையுமாம். இங்கே பல்குனி நதி, விஷ்ணு பாதம், வட விருட்ஷம் ஆகிய மூன்று இடங்களில் திதி கொடுத்தால் அவனது மூதாதையர் மூக்தி அடைவார்கள்.

அங்கிருந்து திரிவேணி சங்கமம் என்ற பிரயாகைக்குச் சென்றனர். இங்கே கங்கை யாற்றுடன் யமுனா நதியும், கண்ணுக்குத் தெரியாமல் சரஸ்வதி நதியும் சங்கமிக்கின்றன. மூன்று நதிகள் கலப்பதால் திரிவேணி சங்கமம் என அழைக்கப்படுகின்றது. இந்தச் சங்கமத்தில் படகில் போய் நீராடலாம்.

படகுக்காரர் ஆற்றின் நடுவேயுள்ள சங்கமத்தில் கொண்டு போய் விடுவார்கள். யமுனை ஆற்றில் போய் கங்கை கலக்குமிடத்திற்குப் போக வேண்டும். போகும்போது பார்த்தால் யமுனாவில் நீர் நீல நிறமாக இருக்கும். கங்கை நீர் தெளிந்த நீராகத் தெரியும். இங்கே நீர் எடுத்துக்கொண்டு போய் காசி விஸ்வநாதருக்கு அபிஷேகம் செய்வது மிகச் சிறப்பானதாகும். திரிவேணி சங்கமத்தில் நீராடுவது காசி கங்கையில் நீராடுவதை விட அதி விஷேஷமானது. ஆகவே, அனைவரும் திரிவேணி சங்கமத்தில் இறங்கி நீராடிவிட்டு அங்குள்ள ஆஞ்சனேயரைத் தரிசித்துக்கொண்டு பரவசமூட்டும் பேரின்ப நினைவுகளோடு அங்குள்ள ஆலமரத்தையும் தரிசித்தனர். இங்கும் பிதிர் தாணம் செய்வார்கள். இறந்தவர்களின் அஸ்தியை திரிவேணி சங்கமத்தில் கரைப்பது மிகவும் புண்ணியமாகும். இந்த இடத்தில் இறைவனின் அருளும், இயற்கையின் அழகும் சங்கமமாகின்றன எனில் மிகையாகாது.

திரிவேணி சங்கமத்தில்தான் பன்னிரு வருடங்களுக்கு ஒரு முறை கும்பமேளா விழா நடைபெறுகிறது. இந்தத் திரிவேணி சங்கமத்தில் ஸ்நானம் செய்பவன் தன்னுடைய குடும்பத்தைச் சேர்ந்த அனைவருக்கும் நற்கதியைத் தேடித் தருகிறான் என மஹாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது. இங்கே தாரகாஞ்சி என்ற இடத்தில் வேணி மாதவர் ஆலயம் உள்ளது. அங்கு மாதவரும் திரிவேணியும் இருக்கிறார்கள். சர்ப்ப ராஜா என்ற வாசுகி ஆலயத்திற்குச் சென்றனர். இக்கோயிலுக்கு முன் பக்கம் உள்ள மண்டபத்தில் பீஷ்மரின் பிரமாண்டமான சிலை ஒன்று அம்புப் படுக்கையின் மேல் காணப்படுகிறது. அங்கே உள்ள ஒரு சாஸ்திரிகன் பிரயாகை யாத்திரை பற்றி ஒரு சுலோகம் இருப்பதாகக் கூறினார். அதாவது "திரிவேணீம் மாதவம் சோமம் பரத்வாஞ்ச வாசுகீம்! வந்தே அக்ஷயவடம் சேஷம் பிரயாகம் தீர்த்த நாயகம்" என்பதாகும்.

நேருஜி குடும்பத்தினர் வாழ்ந்த ஆனந்த பவனம் தற்போது ஒரு நினைவகமா இருக்கிறது. அதைப் பார்வையிட்ட பின் மன நிறைவுடன் காசி சென் றனர். அயோத்திக்கும் போயி ருக்கலாம். நேரமில்லாமல் போய் விட்டது. அதற்கென்ன இன்னொரு முறை வந்து பார்க்கவும் என நீலகண்டன் குடும்பத்தினர் விடை கொடுத் தனர்.

**கா**சி யாத்திரை செய்த மனநிறைவுடன் மிக மகிழ்ச்சியாக ரம்யாவும், மனோகரும் டெல்லி போய் அங்கிருந்து பாரிஸ் சென்றனர். அங்கே ரம்யாவுக்கு அதிர்ச்சி அம்மாவின் கடித உருவில் காத்திருந்தது. "அனுமான் காட் லட்சுமி மாமி சொன்னார். உன்னுடன் அந்த மனோகர் பையன், காசி வந்து நீங்கள் அங்கெல்லாம் சுற்றியதாக. எப்பொழுதிருந்து இந்தப் பழக்கம். வெளிநாடு போனால் நமது கலாச்சாரம், பண்பாடு அனைத்தையும் மறந்து விடுவதா?" என மிகவும் கோபமாக எழுதியிருந்தார். 'எவ்வளவு கவனமாக இருந்தும் லட்சுமி மாமியின் கண்ணில் பட்டு விஷயம் அம்மா வரை போய்விட்டது' என ரம்யா வருந்தினாள். 'அவசரப்பட்டுவிட்டோம். காசி எங்கே போகப் போகிறது. படிப்பு முடிந்த பின் ஆறுதலாகப் போயிருக்கலாம்' என நினைத்தாள்.

'நம் உறவு என்றோ ஒரு நாள் பெற்றோருக்குத் தெரியத்தானே வேண்டும். நடப்பது நடக்கட்டும்' என மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு விபரமாக அப்பாவுக்கு இ-மெயில் அனுப்பினாள். அப்பாவிடமிருந்து வழமைபோல இரத்தினச் சுருக்கமாக "ஒன்றுக்கும் யோசிக்காதே. எல்லாம் நல்லபடியாக நடக்கும்" என்ற பதில் வந்திருந்தது. அதன் அர்த்தம் புரியாமல் ரம்யா தவித்தாள். அதன் பின் தொலைபேசியில் அம்மாவிடம் மன்னிப்புக் கேட்டாள். அம்மா குரல் தழுதழுக்க" "உன் விருப்பத்துக்கு மாறாக நான் ஒன்றும் செய்ய மாட்டேன் செல்லம். படிப்பை முடித்துவிட்டுப் பத்திரமாக வந்து சேர்" என்றார்.



எல்லோரும் எதுவோ பொடி வைத்துப் பேசுவது போல் இருந்தது. மனோவிடம் சொன்னபோது "ஒன்றுக்கும் யோசிக்காதே. கண்ணன் ருக்மணியைத் தூக்கியது போலப் பார்த்தசாரதி கோவில் தேரில் உன்னைத் தூக்கிக்கொண்டு போய் .அவர் சந்நிதியில் வைத்துத் தாலி கட்டுகிறேன்" என்றான். "என் கலக்கம் உங்களுக்கு வேடிக்கையா" எனக் கலங்கினாள். அவளை அன்புடன் அணைத்தவன் "எது நடந்தாலும் நீதான் என் மனைவி ரம்யா. உனக்கு மனம் போல மாங்கல்யம் நம் பெற்றோர் ஆசியுடன் அமையும். பரீட்சை விரைவில் வருகிறது. வா படிக்கும் வழியைப் பார்ப்போம்" என்று சொல்லிப் போனான்.

**ப**ரீட்சை முடிந்து இருவரும் சென்னை சென்றனர். ரம்யா அடுத்த மாதம் காசி போய் வேலையில் சேரவேண்டுமெனச் சொல்லிக் கொண்டிருந்தாள். மனோகருக்கும் நல்ல வேலையாக அவன் கேட்டுக்கொண்டபடி நீலகண்டன் அங்கே ஒரு பதவி ஒழுங்கு செய்திருந்தான். சென்னை வேலையை இராஜினாமாச் செய்துவிட்டு அவன் அங்கு போவதாக இருந்தான். இதற்கிடையில் ரம்யாவின் அம்மா 'இனியும் தாமதிக்க முடியாது. கல்யாணம் செய்தபின் போகலாம்' எனச் சொல்லிக் கொண்டிருந்தார். கல்

யாணம் என்றால் ரம்யாவுக்குக் கலக்கமாக இருக்கும். அதுபற்றி யாரும் எதுவும் அவளிடம் பேசவில்லை. ஒரு நாள் அப்பா "மனோவும் வந்துவிட்டானா? அவன் இனி எங்கே வேலை செய்யப் போகிறான்?" என்று கேட்டதுடன் சரி. யாவும் புதிராக இருந்தது. யாரிடம் கேட்பது, என்ன செய்வது ஒன்றும் புரியவில்லை மனோவிடம் கேட்டதற்கு அவன் வேடிக்கையாக "எல்லாம் நடக்கும். பயப்படாதே" என அபயம் அளித்தான். ஆனால் ரம்யா பயந்தாள். என்னதான் படித்த பெண்ணாக இருந்தாலும் பெற்றோரிடம் தன் திருமணம் பற்றிக் கேட்க அவள் பண்பு தடுத்தது.

அன்று வந்த தொலைபேசி அழைப்பிற்குப் பதில் அளித்த ரம்யாவின் அப்பா கங்காதரன், மனைவியிடம் "மாலதி, அவர்கள் இன்று வரவா எனக் கேட்கிறார்கள். என்ன சொல்ல?" எனக் கேட்டார். தன் ஆர்வத்தை அடக்கமாட்டாமல் ரம்யா தன் அறைக்குள் இருந்து மெதுவாக எட்டிப் பார்த்தாள். "ரம்யாவைக் கேளுங்கோ, எங்காவது வெளியில் போகிறாளோ என்று. இல்லாவிட்டால் எனக்குச் சரி" என்றார். ரம்யா வெளியே வந்து "யார் அப்பா வருகிறார்கள்? நான் எதற்கு?" என்றாள்.

"பெண் பார்க்க என்றால் நீதானே வேணும்" என்றனர். எதுவுமே புரியாமல் அவள் மௌனமாக நிற்பதைக் கண்டு "அதான்மா உன் மனோவின் அப்பா நாராயணனும் அவர் சம்சாரமும் 'நாங்கள் முறைப்படி பேசித் திருமண ஒழுங்குகள் செய்ய வேணும். வரவா' என்று கேட்கின்றனர். அடுத்த முகூர்த்தத்தில் திருமணம் வைக்க வேணுமாம். என்ன சொல்ல? நீ நிற்பாய்தானே?" எனக் கேட்டார்.

ரம்யா தனக்கேற்பட்ட இன்ப அதிர்வால் வார்த்தை வராமல் தடுமாறி வாசல் படியில் சாய்ந்து அப்படியே நிலத்தில் அமர்ந்து விட்டாள். அதைப் பார்த்த அம்மா "இங்கே இதைப் பாருங்கோ" எனப் பதறிப் போய் ஓடி வந்து அவளை அணைத்துக் கொண்டாள். அன்னையின் மடியில் முகம் புதைத்து விம்மி விம்மி அழுத ரம்யா, இதுவரை இருந்த தன் மனப் பாரங்களை எல்லாம் தீர்த்தாள்.

"என்ன இது? ஏன் இந்த அழுகை? நான்தான் சொன்னேனே உன் விருப்பத்தை மீறி எதுவும் செய்யமாட்டோம் என்று. பிறகேன் கலங்கினாய்? அவர்கள் மிகவும்நல்லமாதிரி. இரண்டொரு தடவை இங்கு வந்தார்கள். நானும் உன் அப்பாவும் அவர்கள் வீட்டுக்குப் போயிருக்கிறோம். நீங்கள் வந்தபின் நாள் குறிக்கலாம் என்றிருந்தோம். எழுந்திரு. அவர்கள் வரப்போகிறார்கள். முகத்தை அலம்பி நல்ல புடவையாகக் கட்டிக் கொண்டு வா" என அம்மா அவசரப்படுத்தினாள். இவ்வளவும் நடந்திருக்கிறதா? இதில் பாதியாவது மனோவுக்குத் தெரிந்திருக்காதா? கள்ளன் எதுவுமே சொல்லவில்லை. வரட்டும் பார்க்கிறேன் என்ற செல்லக் கோபத்துடன் ஆயத்தமானாள்.



இந்து கலாச்சாரத்தில் திருமணம் என்பது இரு உள்ளங்களின் சங்கமம் மட்டுமன்றி இரு குடும்பங்களின் சங்கமமுமாகும். ஆகவே, இங்கும் மனோகர் - ரம்யா இருவரின் குடும்பங்களும் தமது சைவ- வைஷ்ணவ வேறுபாடுகளை மறந்து கங்கையும் யமுனையும் திரிவேணி சங்கமத்தில் சங்கமித்தது போல காசியில் பஞ்ச கங்கா காட் போல, அஸி வருணை சங்கமம் போலச் சங்கமித்தனர். திருமணம் உற்றார் உறவினர் நண்பர்கள் வாழ்த்த இனிதே நிறைவேறியது.

தம்பதிகள் உரிய நாளில் காசிக்குப் பயணமாயினர். விமானத்துள் போகும்போது ரம்யா லூர்ட்ஸ் மேரி மாதாவுக்கு உளமார நன்றி சொன்னாள். "அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்பது சிவபுராண வரி. அதேபோல உன்னருள் இருந்தால் நேரில் வந்து என் பிரார்த்தனையை நிறைவேற்றுவேன்" என இதய பூர்வமாக வேண்டியவள் உரிமையுடன் தன் கணவன் தோளில் சாய்ந்து கொண்டாள். அவனும் அன்புடன் அவளை அணைத்துக் கொண்டான். அங்கே சங்கமித்த இரு இதயங்களும் தம் உணர்வுகளை மௌனமாகவே பரிமாறிக் கொண்டன.

வாழ்க

புதுமணத்


தம்பதிகள் ☐





# ஐங்குறுநூறு தரும் காதல் சுவை

— செந்தமிழ்ச்செல்வர் சு.ஸ்ரீகந்தராசா



சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை நூல்களிலே ஐங் குறுநூறு என்பதுவும் ஒன்று.

ஐங்குறுநூறு என்பது குறைந்த வரிகளைக்கொண்ட 500 பாடல்களின் தொகுப்பாகும்.

இந்த நூல் எழுதப்பட்ட மையைக் கூறும் வரலாற்றுச் செய்தி ஒன்று உள்ளது. முடியுடை மூவேந்தர் களிலே, கோச்சேரமான் யானைக்கண் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்ற சேர மன்னன் கடைச்சங்க காலத்திலே ஆட்சியிலிருந்தவர்களில் ஒருவன்.

அந்த மன்னன் தமிழ்மொழியின் மீது தணியாத பற்று டையவன். தமிழ்ப் புலவர்களிடம் அளவற்ற பாசம் உடையவன். தமிழ் இலக்கியங்களைப் படித்து இன்புறுவதிலே அவனுக்கு மிகவும் விருப்பம். அதிலும் அகத்திணை சார்ந்த காதல் இலக்கியங்களைப் படித்துச் சுவைப்பதென்றால் கரும்பைக் கடித்துச் சுவைப்பதுபோல அவனுக்கு இனிக்கும். அத்தகைய மன்னனுக்கு ஓர் ஆசை. அன்பின் ஐந்திணைகளுக்கும், அதாவது ஐவகை நிலங்களுக்கும் தனித்தனியாக நூறு பாடல்கள் கொண்ட நூல்களைப் புலவர்களைக் கொண்டு இயற்றுவிக்க வேண்டும்; தமிழ் உலகம் அதனால் பயனுறவேண்டும் என்பதே அந்த ஆசை. மன்னன் தனது ஆசையைப் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார் என்ற பெரும் புலவரிடம் கூறினான். அவரோ தான் பாடாமல் ஒவ்வொரு திணையிலும் சிறப்புற்று விளங்கும் ஐந்து புலவர்களிடம் அப்பணியை ஒப்படைத்தார். புலவர்கள் பாடி அவரிடம் கையளித்ததும் மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்ற முறையில் வரிசைப்படுத்தித் தொகுத்து, மன்னனின் ஆசையை அவர் நிறைவேற்றினார்.



காதலர்களின் உள்ளத்து உணர்வு களை மிகவும் துல்லியமாக எடுத்துக்கூறும் பாடல்களால் நிரம்பப் பெற்றது ஐங்குறு நூறு. காதலர் ஊடல், களிப்பிலே கூடல், காதலன் கள்ள உறவினைத் தேடல்,

பரத்தைப் பெண்களை நாடல், காதலி வாடல், தோழிப் பெண் காதலனைச் சாடல் என்றிப்படியெல்லாம் உள்ளங்களின் காதல் உணர்வுகளையும் உடல்களின் இன்ப உறவுகளையும் நல்ல விதத்தில் நயம்படச் சொல்லுகின்ற பாடல்களால் நிரம்பப் பெற்றது இந்நூல்.

**ஊ**டலும் ஊடல் நிமித்தமும் உரிப்பொருளாக அமைந்த மருதத்திணைக்குரிய பாடல்களைப் பாடியவர் ஓரம்போகியார் என்ற புலவர். அவரது பாடல் ஒன்று பின்வருமாறு:

தலைவன் பரத்தை ஒருத்தியின் வீட்டிற்குச் சென்று அவளோடு கூடிக்குலாவி இன்பம் அனுபவித்துவிட்டுத் தன் இல்லத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருக்கின்றான். தலைவியின் தோழி அவனைக் காணுகிறாள். அவனது உடலிலும், வெளித்தோற்றத்திலும் அவன் விலைமாதரோடு களித்திருந்தமைக்கான அடையாளங்கள் தென்படுகின்றன. அதைக் கண்டு கொண்ட தோழி அவனிடம் சொல்வது போல அமைந்தது இந்தப் பாடல்:

*"செவியிற் கேட்பினும் சொல்லிறந்து*
*வெகுள்வோள்,*
*கண்ணிற் காணின்,*
*என்னா குவள்கொல்*
*நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும்*
*தைஇத் தண்கயம் போலப்,*
*பலர்படிந் துண்ணும் நின் பரத்தை*
*மார்பே."*

(ஐங்குறுநூறு பாடல் இல: 84)

பிற பெண்களோடு நீ உறவாடுகின்றாய் என்பதைத் தன் காதினால் கேட்டாலே சொல்லில் அடக்க முடியாதளவு கடுங் கோபம் கொள்வாளே உன் காதலி. அப்படியிருக்கும்போது, தைத்திங்கள் நாளில், நறுமணம் வீசுகின்ற மலர்கள் சூடப்பட்ட கூந்தல்களையுடைய பெண்கள் எல்லாம் இறங்கி நீராடுகின்ற குளத்தைப்போல, விலைமாதர்கள் பலர் தழுவிக்கிடந்த உன் மார்பிலே காணப்படுகின்ற புணர் குறிகளை இப்போது அவள் கண்டால் என்ன ஆகுவாளோ? (உயிரையே விட்டுவிடுவாளே!)

**இ**ரங்கலும் இரங்கல் நிமித்தமும் உரிப்பொருளாக அமைந்த நெய்தல் திணைக்குரிய பாடல்களை அம்மூவனார் என்ற புலவர் பாடியுள்ளார்.

இரங்கல் என்பது அன்புடைய காதலர்கள் ஒருவரை ஒருவர் நினைத்து ஒருவருக்காக மற்றவர் இரங்கியிருத்தல். உதாரணமாக, கடலில் மீன்பிடிக்கச் சென்ற காதலனை நினைத்து, அவன் கரையேறி வரும்வரை காதலி கலங்கியிருத்தல். நெய்தல் திணையின் உள்ளத்து உணர்வுகள் வேதனையோடு கூடியதாகவே இருக்கும். அத்தகைய சோக உணர்வுகளை சுவையாக வெளிப்படுத்துகின்றன ஐங்குறுநூற்றின் நெய்தல் திணைப் பாடல்கள்.



அவற்றிலிருந்து ஒரு பாடல் பின்வருமாறு:


*"கோளர் எல்வளைக் கொழும்பல் கூந்தல்*
*ஆய்தொடி மடவரல் வேண்டுதி யாயின்*
*தெண்கழிச் சேயிறாப் படூஉம்*
*தண்கடற் சேர்ப்ப வரைந்தனை கொண்மோ!"*

(ஐங்குறுநூறு பாடல் இல: 196)

தலைவியின் தோழியிடம் உதவி கேட்கிறான் தலைவன். அவன் தலைவியின் மேல் காதல் வயப்பட்டு அவளுடன் களவு உறவிலே ஈடுபட விரும்புகின்றான். அவனது எண்ணத்தை அறிந்தும் அறியாதவள் போல, அவர்களது கள்ளத்தொடர்பு நீடிப்பதை விரும்பாமல் அவனுக்கு அறிவுரை கூறுவதாக அமைந்தது இந்தப் பாடல்.

தெளிந்த நீரிலே சிறந்த இறால் மீன்கள் அகப்படுகின்ற குளிர்ந்த கடல் உள்ள நெய்தல் நிலத்தைச் சேர்ந்தவனே! சங்கை அறுத்துச் செய்யப்பட்ட வளையல்களையும், தோளுக்குப் பொருத்தமான தோளணியினையும் அணிந்துள்ளவளும், பலவிதமாக முடித்த கூந்தலை உடையவளுமான அவளை நீ அடைவதற்கு விரும்பினால், முறைப்படி வந்து பெண்கேட்டு அவளைத் திருமணம் செய்துகொள்.

(அதைவிடுத்து களவு உறவிலே நீ அவளை அடைந்து இன்புற முடியாது என்பது கருத்து)



**பு**ணர்தலும் புணர்தல் நிமித்தமும் உரிப்பொருளான குறிஞ்சித் திணைக்குரிய பாடல்களைப் பாடியவர் புகழ்பெற்ற புலவராகியகபிலர். சங்க இலக்கியங்களில்

அதிகமான பாடல் களை இவர் பாடியுள்ளார். ஐங்குறு நூறில் அவர் பாடிய நூறு பாடல்களில் ஒன்றைச் சுவைப்போம்:

*"அலங்குமழை பொழிந்த அகன்கண் அருவி*
*ஆடுகழை யடுக்கத் திழிதரும் நாடன்*
*பெருவரை யன்ன திருவிறல் வியன் மார்பு*
*முயங்காது கழிந்த நாள் இவள்*
*மயங்கிதழ் மழைக்கண் கலிழும்- அன்னாய்!"*

(ஐங்குறுநூறு பாடல் இல: 220)

அவளை மணம் முடிப்ப தற்குப் பலர் பெண்கேட்டு வருகின் றனர். அவ்வாறு வருபவர்களில் யாரையாவது அவளின் பெற்றோர் ஏற்றுக்கொண்டு விடுவார்களோ என்று கவலைப்படுகிறாள், அவளின் காதல் தொடர்பை அறிந்த அவளது தோழி. அதனால், அவளின் செவிலித்தாயிடம் சென்று அவளின் காதல் பற்றிக் குறிப்பால் உணர்த்துவதாக அமைந் தது இந்தப் பாடல்.


இதன் கருத்து:

அன்னையே! அசைகின்ற மேகங்கள் பொழிகின்ற மழை யினால், அகன்று பரந்து வீழ் கின்ற அருவி, (காற்றில்) ஆடிக் கொண்டிருக்கும் மூங்கில்கள் நிறைந்த மலைப்பகுதியிலே எந்நேரமும் ஒழுகிக்கொண்டே இருக்கும். அத்தகைய மலையைச் சேர்ந்தவன் மலைநாடன். மாமலை போன்ற அவனது வெற்றி பொருந்திய அழகிய அகன்ற மார்பைத் தழுவாது விட்ட நாட் களில் உன் மகளின் மலர் போன்ற கண்கள் நீரைச் சொரியும். இதனை நீ அறிவாயாக.

அதாவது, ஒருநாள் மலை நாடனைத் தழுவாது விட்டாலும் அன்றெல்லாம் அழுதழுது கண்ணீர் வடிப்பவள் உன் மகள். அந்தளவு அவனோடு காதல் கொண்டிருப்பவளின் உள்ளம் வேறு யாரையும் தழுவுவதற்கு இடம் தருமா? எனவே, அவனுக்கே அவளை மணம் முடித்துக் கொடுத்துவிடு என்பது தெளிவான கருத்து.

பிரிதலும், பிரிதல் நிமித்த மும் உரிப்பொருளாக அமையப் பெற்ற பாலைத்திணைக்கான பாடல்களைப் பாடியவர் புலவர் ஓதல் ஆந்தையார்.

காதலர்களுக்கிடையே பிரிவு ஏற்படும்போது உள்ளங் களின் நெருக்கம் மேலும் இறுக்க மாகும். ஒருவரையொருவர் நினைத்து ஏங்கும்போது இருவரின் இதயங்களிலும் காதல் கனிந்து உருகும். அந்த உணர்வுகளைப் புலவர் ஓதல் ஆந்தையார் மிகவும் அற்புதமாகச் சித்தரித்துள்ளார். அவரது பாடல்களில் இருந்து ஒன்று பின்வருமாறு:



மகளைக் காணவில்லை என்று தாய் தனது வீட்டில் அழுது கொண்டிருக்கின்றாள். அவளது மகள் காதலனுடன் காட்டுவழியே சென்றதைக் கண்டவர்கள் அவளிடம் வந்து சொல்வதுபோல அமைந்த பாடல் இது:

*"புன்கண் யானையொடு புலிவழங் கத்தம்*
*நயந்த காதலற் புணர்ந்து சென்றனளே*
*நெடுஞ்சுவர் நல்லில் மருண்ட*
*இரும்பை யுறுவிநின் கடுஞ்சூன் மகளே!"*

(ஐங்குறுநூறு பாடல் இல: 386)

இதன் கருத்து:

நெடிய சுற்றுச் சுவராகிய மதிலால் பாதுகாக்கப்படும் நல்ல வீட்டிலே இருந்து கவலைப்பட்டுக் கொண்டிருப்பவளே! நீ முதன்முதலில் பெற்றெடுத்த உனது மகள், துன்பம் கொடுக்கும் யானைகளும் புலிகளும் அலைந்து திரிகின்ற கொடிய காட்டுவழியையும் கடந்து, தான் விரும்பிய காதலனுடன் ஒன்றுகலந்தவளாகச் சென்று கொண்டிருக்கின்றாள்.

இவ்வளவு பெரிய பாதுகாப்பான அழகிய நல்ல வசதியான வீட்டில் வாழ்வதை விடுத்து, கொடிய விலங்குகள் வாழும் காட்டினூடாகச் செல்ல வேண்டிய துன்பத்தையும், அபாயத்தையும் எதிர்கொண்டு செல்கிறாள் என்றால் அவள் அந்த அளவுக்குக் காதல் வசப்பட்டுள்ளாள் என்பதுதானே காரணம். அவளது காதலை நீ அங்கீகரித்து அவள் விரும்பியவனுக்கே அவளை மணமுடித்துக் கொடுத்திருந்தால் இப்படி அவள் சென்றிருக்கமாட்டாள் என்று இப்பாடலுக்கு விரித்துக் கருத்துக் கொள்ள வேண்டும். "நயந்த காதலற் புணர்ந்து சென்றனள்" என்பது அவள் விரும்பியவனோடு இணைந்து செல்கிறாள், வேறென்னதான் செய்வாள் என்ற கருத்தை அழகாக வெளிப்படுத்தி நிற்கின்றது.



முல்லைத்திணையின் உரிப்பொருள் இருத்தலும் இருத்தல் நிமித்தமும். இதற்கான பாடல்களை பேயனார் என்னும் பெரும்புலவர் பாடியுள்ளார்.

கார்காலம் வந்தது. அதுதான் இன்பம் நுகர்வதற்கு ஏற்ற காலம். வீடு திரும்பிய தலைவன் தலைவியுடன் கூடி மகிழ்ந்திருக்கிறான். ஒரு நாள் அவளை அழைத்துக்கொண்டு காடு நிறைந்த பகுதிக்குப் "பொழிலாட்டயர்தலை" நாடிச் சுற்றுலாச் செல்கின்றான். அங்கே கார்காலத்தில் எழக்கூடிய இன்ப உணர்வுகளால் விலங்குகள் ஒன்றுடன் ஒன்று கலந்து இன்புற்றிருப்பதைக் காணுகிறான்; அவளுக்குக் காட்டுகிறான்.


*"உயிர்கலந் தொன்றியசெயிர்தீர் கேண்மைப்*
*பிரிந்துறல் அறியா விருந்து கவவி*
*நம்போல் நயவரப் புணர்ந்தன*
*கண்டிகும் மடவரல்! - புறவின் மாவே"*

(ஐங்குறுநூறு பாடல் இல: 419)

இதன் கருத்து:

'அன்பே! இந்தக் காட்டுப்பகுதியிலே உள்ள விலங்குகளைப் பார்! பருவகாலத்தின் இன்பத்தின் தூண்டுதலால் உடல்கள் மட்டுமின்றித் தம் உயிர்களும் ஒன்று கலந்துவிட்டவாறு அன்புப்பிணைப்போடு அவை ஒன்றுடன் ஒன்று சேர்ந்து மகிழ்கின்றன. ஒன்றைவிட்டு மற்றொன்று பிரிவதென்பதையே அறியாதனவாக நம்மைப்போல விருப்போடு ஒன்றுசேர்ந்து களித்திருக்கின்றன' என்று தலைவன் தலைவிக்குச் சொல்கிறான்.

"பிரிந்துறல் அறியா" என்பதன் மூலம், மனிதர்களைப் போல காதலியைப் பிரிந்து காதலன் செல்கின்ற நிலைமைகளை விலங்குகள் அறியாதன; அவ்வாறு அவை எப்போதும் பிரிவதில்லை; பிரிவுத் தவறைச் செய்து துயரப்படுவது மனிதர்களாகிய நாம்தான் என்கின்ற உட்கருத்தும் இதில் இழையோடுகின்றது.



# கார்ல் மார்க்ஸ் தத்துவமும் வட்டிக்கடை வரதராசாவும்!

- ஆசி கந்தராஜா

'Das Kapital' (The Capital) என்னும் நூலை கார்ல் மார்க்ஸ் தன் தாய் மொழியாகிய ஜேர்மன் மொழியில் எழுதினார். பொருளாதாரம் மற்றும் அரசியல் அமைப்புச் சம்பந்தமாக இதுவரை முன்மொழியப்படாத புதிய சித்தாந்தத்தை அது முன் வைத்தது. கம்யூனிச பொருளாதார வாதத்தின் விவிலிய நூல் இதுதான். இதுகுறித்த பல்வேறு விளக்கங்களை கார்ல் மார்க்ஸ் தமது தோழர் எங்கிள்ஸ் உடன் இணைந்தும் எழுதினார்.

லெனின், கார்ல் மார்க்ஸ், எங்கிள்ஸ் போன்ற மேதைகள் எழுதிய கருத்துச் சாரங்களை, நான் ஜேர்மனியில் கல்வி கற்ற காலங்களில், ஜேர்மன் மொழியிலேயே கல்வி கற்றுத் தேறும் வாய்ப்பு கிட்டியது.



சோசலிஷ மற்றும் முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கைகளுக்கிடையே பாரிய வித்தியாசங்கள் உண்டு. இது பற்றி ஜேர்மன் பேராசிரியர் அமெரிக்க டொலர்களை உதாரணம் காட்டி மாதக்கணக்கில் எமக்கு விரிவுரையும் நிகழ்த்தியிருக்கிறார்.

அமெரிக்க டொலர்கள் மற்றும் பிரித்தானிய ஸ்ரேலிங் பவுண்ட்ஸ் ஆகியன, தங்கு தடையின்றி உலகமெங்கும் பரவிக் கிடக்கின்றன. அமெரிக்க டொலர்கள் ஆபிரிக்காவில் வாழும் கொங்கோ நாட்டு மக்களிடமும் இருக்கிறது, லற்றின் அமெரிக்காவிலுள்ள வெனிசுவேலா பிரசையிடமும் இருக்கிறது. இந்தப் பணமெல்லாம் ஒருநாள், ஒரேநேரத்தில் அமெரிக்காவுக்குள் கொண்டு வரப்பட்டால் என்ன நடக்கும்?

சடுதியான பணவீக்கம் ஏற்படும்! அதனைச் சமாளிக்கும் திறன் அவர்களிடம் உண்டு. அவர்கள் அச்சிடும் டொலர் நோட்டுக்களுக்குப் பெறுமதியான பொருளாதார வலு தங்கமாகவோ அல்லது வேறு ரூபத்திலோ அமெரிக்க நாட்டு மத்திய வங்கியில் இருக்கிறது. இது உபரியாக புழக்கத்துக்கு வரும் டொலர்களைச் சமாளிக்கும். இதுவே அவர்கள் பலத்தின் சூக்குமம்.

சோசலிஷ பொருளாதாரம் அப்படியல்ல. கார்ல் மார்க்ஸ் சொல்லிய பொருளாதாரத் தத்துவத்தின்படி **"பணம் என்பது சுற்றிச் சுழல வேண்டியதொரு ஊடகம். அது ஓரிடத்தில் அல்லது ஒருவரிடத்தில் நிரந்தரமாகத் தங்கக்கூடாது."** (Geld ist ein zirkulation mittel" (German language) - Money is a circulation medium).

சோசலிஷ நாடுகளில் பாவனைக்கும் விற்பனைக்கும் விடப்படும் பொருள்களின் பெறுமதிக்கேற்பவே, அங்கு பணமும் புழக்கத்தில் விடப்படும். நாட்டின் பொருளாதாரத்துக்கும் புழக்கத்தில் விடப்படும் பணத்துக்கும் சமநிலை பேணப்பட வேண்டும். இல்லையேல் பணவீக்கம் ஏற்படும். மத்திய வங்கியில் பொன்னையும் பொருளையும் சேர்த்து வைக்கும் நிலையில் இந்நாடுகள் இல்லை. இதனால்தான் கம்யூனிச நாட்டுப் பணம் தங்கு தடையின்றி உலகமெங்கும் உலவுவதில்லை.

படித்தவற்றை பிரயோகித்துப் பார்ப்பது எனது வழக்கம். இதனால் நான் பல தடவை சிக்கல்களில் மாட்டியதும் உண்டு. வட்டிக்



கடை வரதராசாவும் நானும் ஒன்றாக ஊர் பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள். படிப்பில் அவனுக்கு அதிக நாட்டமில்லை. பத்தாம் வகுப்புடன் தகப்பனின் வட்டிக் கடையில் அமர்ந்துவிட்டான். இருப்பினும், வெளிநாட்டுக்குப் போக வேண்டுமென்று அவனுக்குத் தீராத ஆசை. நான் ஊருக்குச் சென்றபோது ஜேர்மன் வாழ்க்கை பற்றியும் எனது படிப்பு பற்றியும் கேட்டான். **"பணம் என்பது சுற்றிச் சுழல வேண்டியது"** என்ற கார்ல் மார்க்ஸ் தத்துவத்தை கதையோடு கதையாக அவிழ்த்து விட்டேன்.

அடகுபிடித்த நகைகளைப் பத்திரப்படுத்தும் இரும்பு அலுமாரிகள் வைத்திருந்த, இரும்புக்கிறாதி அடித்த அறைக்குள் இருந்து வரதராசாவின் தகப்பன் தனது பாரிய தொந்தியைத் தடவிக்கொண்டு வெளியே வந்தார்.

எனது கதை அவருக்குப் பிடிக்கவில்லை என்பது அவரது முகத்தில் தெரிந்தது. "வங்கி பூட்டப் போறாங்கள் காசு கொஞ்சம் எடுத்துவா..." எனச் சொல்லி மகனை என்னிடமிருந்து பிரிப்பதில் அவசரம் காட்டினார். முடிவில், நான் அங்கிருந்து புறப்படுகையில், "படிச்ச பெடியன், பிழைக்கிற வழியைப் பார்" எனச் சொல்லி கதவைச் சாத்தினார்.

விடுமுறையில் நான் யாழ்ப்பாணத்தில் நின்றபோது, லங்கா சமசமாசக் கட்சிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் தேர்தல் வேலை செய்த பொன்னையா மாஸ்ரர் தொடக்கம் தமிழரசு தம்பித்துரை அண்ணர் வரை கார்ல் மார்க்ஸின் **"பணம் சுற்றிச் சுழல வேண்டிய தத்துவத்தை"** சொல்லிப் பார்த்தேன்.

ஈழத்தமிழனுக்கு சோசலிஷம் சரிவருமோ? என அன்று எனக்கு ஏற்பட்ட ஐயத்துக்கு இன்றுவரை பதில் கிடைக்கவில்லை.





# பெண் வளர்ந்து பெரியவளானால்!

- நா. மகேசன்

### தோற்றுவாய்

குழந்தைகள் வளர்ந்து பத்துப் பதினைந்து வயதுள்ள பிள்ளைகளாக வரும் போது அவர்களுடைய உடலமைப்பிலும் மன நிலையிலும் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆண்பிள்ளைகளுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் இந்த மாற்றங்கள் ஏற்படுவது நியதி. ஆனால் ஆண் பிள்ளைகளுக்கு ஏற்படும் இம்மாற்றங் களை நாம் அதிகம் பெரிதுபடுத்துவதில்லை. பெண் பிள்ளைகளுக்கு இந்த மாற்றங்கள் ஏற்படும் போது நம்மவர்கள் இதைப் பெரிதுபடுத்திக் கொண்டாட்டங்களாக மாற்றிவிடுகிறார்கள். மொட் டாக இருந்த மலர் மலர்ந்து பூவாக மாறுவதை எண்ணிப் பெண்ணின் இந்த மாற்றத்தைப் பூப் பெய்துதல் என்று சொல்கிறார்கள். இந்தப் பாலியல் மாற்றங்கள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இயற்கையாகவே நடைபெறுகின்றவை. உலக இனங்கள் இச்சம்பவத்தை எவ்வாறு கையாளு கின்றன என்ற ஆராய்ச்சியில் இறங்காமல் நம் தமிழர்கள், பெண் பிள்ளைகளுக்கு ஏற்படுகின்ற இந்தப் பாலியல் மாற்ற நிகழ்வை எவ்வாறு கையாண்டார்கள், தற்காலத்தில் எப்படிக் கையாளு கிறார்கள் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

### கால நேரம் தெரியாமல் ஏற்படும் எதிர்பார்த்த நிகழ்வு

பூப்பெய்தும் நிகழ்வு எப்போ நிகழும் என்று எவராலும் சொல்ல முடியாது. திடீரென ஏற்படுவதனால் சம்பந்தப்பட்ட பெண்பிள்ளை களுக்கு அதிர்ச்சியும் மனக்கிலேசமும் ஏற்படுவது இயற்கை. இந்த நிலையைச் சமாளிப்பதற்குப் பெற்றோர் இதுபற்றிய செய்திகளை வளர்ந்து வரும் பெண்பிள்ளைகளுக்குச் சிறுகச் சிறுக, சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் சொல்லி வைக்கவேண்டும். குறிப்பாகத் தாய்மார் கவனிக்க வேண்டிய ஒன்று. இந்நிகழ்வு நடந்த நேரத்தில் பெண்ணை அமைதியாக ஒரு இடத்தில் இருக்கச் செய்து, தாய் தந்தையர் உற்சாகமான வார்த்தைகள் பேசி, மனதுக்கும் உடலுக்கும் ஆறுதல் அளிக்கக் கூடியதாக நடந்து கொள்வது மிகவும் அவசியம்.

இவ்வேளை பெண்ணுறுப்பு வாயிலாக வெளியேறிய இரத்தக் கறை படிந்த உடையை மாற்றித் தூய்மை செய்யவேண்டிய நிலை ஏற்படும். இந்த நடைமுறையைத் தமிழர்கள் ஒரு சடங்காகச் செய்வது வழக்கம். முதல் முதல் செய்யப்படும் இந்தச் சுத்திகரிப்பில் பெண்ணின் தாய்மாமனையும் மாமியையும் அழைத்துத் தலைக்குத் தண்ணீர் வார்த்து முழுகாட்டும்படி செய்வார்கள். அதன் பின்னர் சில நாட்கள் வரை பெண்ணை வீட்டில் இருத்தி வைத்து நல்ல சத்தான உணவு வகைகள் உண்ணக் கொடுத்து பிள்ளையின் உடலும் உள்ளமும் தேறும் வகை செய்வார்கள். இந்தத் தலைக்குத் தண்ணீர் வார்க்கும் வைபவம் மிகவும் சுருக்கமான முறையில் நடைபெறும்.

இவ்விடத்தில் பழையகாலத்தில் நடந்து வந்த ஒரு வழக்கத்தை இங்கே குறிப்பிட வேண்டும். முற்காலத்தில் தற்காலத்தைப் போன்று குளியல் அறைகளும், பிற சாதனங்களும் கிடையாது.



அநேகமாகக் கிணற்றடியில் தான் குளிக்க வேண்டும். கிணற்றின் பக்கத்திலோ அல்லது வேறு நீர் நிலைகளில் பக்கத்திலோ வைத்துக் குளிப் பாட்டினால் அழுக்கு நீர் கிணற்றில் அல்லது நீர்நிலையில் தெறித்து அவற்றின் நீரை அசுத்தப்படுத்தி விடும். ஆகவே நீர்நிலைக்குப் புறம்பாக இருந்த குப்பை மேட்டிலே பெண்ணை நிறுத்திக் குளிப்பாட்டினார்கள். குப்பை மேட்டில் அழுக்குநீர் குப்பையோடு குப்பையாகப் போகும் என்ற காரணத்தினால்.

ஆனால் இந்த விளக்கம் இல்லாத தற்கால மக்களில் சிலர் குப்பையில் விட்டுத் தலைக்குத் தண்ணீர் வார்க்க வேண்டும் என்று குப்பையை அள்ளிவந்து அதன்மேல் பெண்ணை விட்டுக் குளிப்பாட்டுகிறார்கள் என்று அறியக் கிடக்கிறது. சிலர் குளியல் அறையில் உள்ள தண்ணீர்த் தொட்டியில் குப்பையைக் கொட்டி அதன் மேல் பெண்ணை நிறுத்தித் தண்ணீர் வார்த்துக் குளிப்பாட்டுகிறார்கள் என்றும் அறியக்கிடக்கிறது. என்னே மடமை! ஐதீகம்! உடன் தலைக்குத் தண்ணீர் வார்த்து ஏழாம் நாள் அல்லது 14-ம் நாள் சாமர்த்தியச் சடங்கு இடம் பெறும். இது உற்றார் உறவினர் நண்பர்கள் கலந்து கொள்ளும் ஒரு வைபவமாகும். இன்று பெண்ணுக்குப் பால் அறுகு வைத்து நெருங்கிய சொந்தக்காரர் நீராட்டுவர். பின்னர் பெண்ணுக்குச் சேலை உடுத்தி, தங்க ஆபரணங்கள் அணிவித்து மணப்பெண்போல அலங்கரித்துக் கையில் ஒரு சிறு கும்பத்தைக் கொடுத்து, ஓரிடத்தில் இருத்தி ஆரத்தி எடுப்பர்.

இந்த ஆரத்தியானது பல வகைப் பொருட்களாலும், உணவுப் பண்டங்களாலும் அமையும். இதனைச் சுமங்கலியான பெண்களே செய்வர். இதன்பின்னர் விருந்தினர் பெண்ணுக்குப் பரிசுகள் வழங்கி ஆசி கூறுவர். பின்னர் அனைவரும் விருந்துண்டு மகிழ்ந்து விடை பெறுவர்.

மிகப் பழங்காலந்தொட்டு இந்த வைபவம் ஒவ்வொரு குடும்பத்தினரின் பொருளாதார வளத்துக்குத் தக்கபடி நடத்தப்படுவது வழக்கம். மேற்கண்ட சாமர்த்தியச் சடங்கின் உள் நோக்கம். தேவை என்பனவற்றை இனி ஆராய்வோம்.

**தாய்மாமன். மாமி தலைக்குத் தண்ணீர் வார்த்தல்**

தமிழ்நாட்டவர்களைப் போல் தாய்மாமன், மருமகளைத் திருமணம் செய்யும் வழக்கம் இலங்கைத் தமிழர்



களிடம் கிடையாது. இருப்பினும், தாய் மாமன் பெண்ணுக்கு இரத்த உறவுடைய மிகுந்த நெருங்கிய சொந்தக்காரன் எனக் கருதப்படுகிறது. ஆதலால் தான் இந்தச் சடங்கில் தாய் மாமனுக்கும் மாமிக்கும் சிறப்பிடம் வழங்கப்படுகிறது. இந்தச் சிறப்பிடத்தைப் பயன்படுத்தி, தாய் மாமன் பெண்ணைத் திருமணம் செய்ய வேண்டும் என்று கட்டாயமாகக் கொள்வது சரி போல் தோன்றவில்லை.

**வீட்டுக்கு விலக்கு அல்லது வீட்டுக்குத் தூரம்**

பூப்பெய்திய நாளில் இருந்து ஏழு நாட்கள் அல்லது 14 நாட்கள் பெண்ணை வீட்டின் ஒரு தனியிடத்தில் வைத்துப் பெண்கள் அவளுக்கு வேண்டிய அமைதியையும், உண்டிகளையும் செய்து கொடுப்பார்கள். இக்காலத்தை வீட்டுக்கு விலக்கு என்று சொல்வார்கள். சாமர்த்தியச் சடங்கு முடிந்தபின் இந்த



வீட்டுக்கு விலக்குக் காலம் முற்றுப் பெறும். அன்றைய நீராட்டுக்கு முன்னர், வீடும் சுற்றாடலும் கழுவிச் சுத்தம் செய்யப்படும். இச்சுத்திகரிப்புக்கோ அன்றிச் சாமாதியச் சடங்குக்கோ ஐயரை வருவித்துத் துடக்குக் கழிக்கும் வழக்கம் கிடையாது. ஆனால் தற்காலத்தில் சிலர் ஐயரை அழைத்துத் துடக்குக் கழித்தபின் சாமர்த்தியச் சடங்கைச் செய்கிறார்கள். இது விளங்காக் குழப்பம். அப்படியாயின், பெண்களுக்கு மாதவிடாய் வரும் நாட்களில் எல்லாம் ஐயரைக் கூப்பிட்டுத் துடக்குக் கழிக்வேண்டி இருக்கும். அப்படி ஒருவரும் செய்வதில்லையே. அப்படியிருக்க, பூப்பெய்தியதற்கு மட்டும் துடக்குக் கழிப்பதேன்?

**துடக்கு என்றால் என்ன?**

பிறப்பு, இறப்பு, பூப்பு இந்த நிகழ்வுகள் ஏற்பட்டபோது சம்பந்தப்பட்டவர்களுக்கு உடற்சுத்தியும், ஆறுதலும், அமைதியும் கொடுக்கும் முகமாகவும், நிகழ்ந்த இடத்தின் சுத்திகரிப்புக்காகவும் கால அவகாசம் கொடுப்பதே துடக்கு என்று சொல்லப்படுகிறது. இது முழுக்க முழுக்கச் சுகாதார

அடிப்படையில் வைக்கப்பட்ட ஒழுங்கு. இதில் ஒருவருக்கு ஏழுநாள், மற்றவருக்கு பதினான்கு நாள், பிறிதொருவருக்கு முப்பத்தொரு நாள் என்று வைப்பதில் அர்த்தம் இல்லை. சுகாதார நோக்கோடு வைக்கப்பட்ட இந்த விதியைச் சமய சம்பிரதாயங்களுடன் இணைத்து விட்டார்கள் பிற்காலத்தவர். தற்காலத்தில் மிகுந்த முன்னேற்றமான சுகாதார சாதனங்கள் கிடைக்கும்போது துடக்கைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதனால் சம்பந்தப்பட்டவர்கள் தூய்மையைக் கடைப்பிடித்துக்கொண்டு தமது மனத்துக்கு எந்தக் கால எல்லை ஆறுதல் அளிக்கிறதோ அந்த எல்லையைக் கடைப்பிடித்து ஒழுகுவதே சிறப்பாகும். அதற்கு மேல், பொது இடங்களில் விலகி நிற்கவேண்டிய அவசியம் இல்லை. எமது மக்களுடைய இரத்தத்தோடு கலக்கப்பட்டு விட்ட இந்தக் கொள்கைகளை உடனடியாக மாற்றிவிட எவராலும் முடியாது. ஆனால் இவற்றின் உள்நோக்கங்களை உணர்ந்து காலதேச ஒழுங்கு முறைகளுக்கேற்ப மாற்றி அமைத்துக் கொள்வதே அழகாகும்.

**சாமர்த்தியச் சடங்கின் நோக்கம் என்ன?**

முற்காலத்தில் பருவமடைந்த பெண்கள் வீட்டை விட்டு அதிகம் வெளியே செல்வதில்லை. அவர்களுடைய உலகம் வீடாகவே இருந்தது. ஒரு பெண் பூப்பெய்திவிட்டாள் என்பதை உற்றார் உறவினரும், ஊரவரும் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே அந்த நிகழ்வை ஒரு கொண்டாட்டமாக அமைத்து, வருங் காலத்தில் அவள் திருமண வாழ்க்கைக்குத் தயாராகிவிட்டாள் என்பதைப் பலரும் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பாகச் செய்யப்பட்ட ஒரு முன்னேற்பாடாகும்.

மேலும் சம்பந்தப்பட்ட பெண்ணுக்குத் தான் பொறுப்புள்ள ஒரு மங்கை என்பதையும், தான் முன்போல ஒரு சிறுபிள்ளை அல்ல என்பதையும் மனதில் உறுதி செய்து தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் முகமாகவும் செய்யப்படும் சடங்காகும். சாமர்த்தியச் சடங்கு என்று சொல்லும்போதே, எந்த ஒரு சூழ்நிலையிலும் பெண் சாமர்த்தியமாக நடப்பதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது தெரிகிறதல்லவா?

**சாமர்த்தியச் சடங்கின்போது ஆரத்திகள் எடுப்பதேன்?**

முன்னர் குறிப்பிட்டது போல இந்தச் சடங்கில் உணவுப் பண்டங்கள், பூ, பழம்,



தேங்காய், நிறைநாழி, வேப்பிலை என்னும் பல பொருட்களால் ஆரத்தி எடுக்கப்படுவது வழக்கம். இந்தப் பொருட்களால் ஆரத்தி எடுப்பதன் நோக்கத்தைப் பலர் அறியார். மரபு முறையாகச் செய்யப்பட்டது என்பதற்காக விளக்கமில்லாமல் எல்லோரும் செய்கிறார்கள். சிலர் இதைக் கழிப்புக் கழிப்பது என்றும், நாவூறு, கண்ணூறு கழிப்பதற்காகச் செய்யப்படுகிறது என்றும் சொல்கிறார்கள். ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் இதிலே கழிப்புக் கழித்தல் என்பதற்கு இடமே இல்லை. பேய் பிசாசுகளுக்குத்தான் கழிப்புக் கழிப்பார்கள். அப்படியான ஒரு சூழ்நிலை இங்கே அறவே கிடையாது. அப்படியானால் இந்த ஆரத்திகளின் நோக்கம் என்ன? பழைய காலத்தில் இப்படி ஆரத்தியில் சேர்க்கப்பட்ட பொருட்கள் வாழ்வாதாரத்துக்கு மிகுந்த முக்கிய பொருட்களாகக் கருதப்பட்டன. ஆகவே "இந்தப் பொருட்கள் எல்லாம் உனக்கு நிறைவாகக் கிடைக்க வேண்டும் நீ எந்தத் தட்டுப்பாடும் இல்லாமல் வாழவேண்டும்" என்று வாழ்த்துவதே இந்த ஆரத்திகளின் நோக்கமாகும். உதாரணத்துக்குச் சில பொருட்களை எடுத்துக் கொள்வோம்.



**நிறைநாளி:** ஒரு அளவு கொத்திலே நெல்லை நிறைத்து அதிலே ஒரு காம்புச் சத்தகத்தைக் குத்தி எடுத்துக் கொள்வது நிறைநாளி எனப்படும். இதில் நெல் விதைபொருள். காம்புச் சத்தகம் கத்தி, கடப்பாரை, ஏரின் கொழு முதலிய இரும்பாலான ஆயதங்களைக் குறிப்பது. இவை உழவுத் தொழிலுக்கு இன்றியமையாத பொருட்கள். நெல் தமிழரின் முக்கிய உணவு. இந்த பொருட்கள் அனைத்தும் இல் வாழ்க்கைக்குத் தயாராகிவிட்ட பெண்ணுக்குக் குறைவில்லாமல் கிடைக்கவேண்டும் என்று வாழ்த்துவதே இதன் அடையாள ரீதியான நோக்கம்.

**உணவு வகைகள்:** சோறு, பிட்டு, கூழ், பால், ரொட்டி முதலிய உணவு வகைகளும் மேற்கண்டவாறு, நிறைவாகக் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துவதையே குறிக்கும். அத்தோடு இந்த உண்டிகளைத் தயாரிக்கும் பாக முறைகளையும் சீக்கிரம் நீ கற்றுத் தேற வேண்டும் என்பதையும் குறிப்பதாக அமையும். பால், ரொட்டியால் ஆரத்தி எடுக்கும்போது, அந்த ரொட்டிகளைப் பிய்த்துப் பெண்ணின் தலைக்குப் பின்புறமாக எறிகிறார்கள். ஏன் அப்படிச் செய்கிறார்கள் என்று எவருக்கும் தெரிவதில்லை. ஐதீகப் பேர்வழிகளைக் கேட்டால் அட்டதிக்குப் பாலகருக்குக் கழிப்புக் கழிக்கிறார்கள் என்று சொல்வார்கள். இது நிஜவாழ்க்கையில் ஒரு கற்பனைக் கோட்பாடு. அட்டதிக்குப் பாலகர்கள் எங்கிருந்து வந்தார்களோ எவருக்கும் தெரியாது. மற்ற உயிரினங்கள் உண்பதற்காக எறிகிறார்கள் என்று சொன்னால் மிகவும் உயர்ந்த கோட்பாடாய் இருக்கும். ஒருவேளை முன்னோர் அதற்காகத்தான் செய்தார்களோ யார் அறிவார்.



**வேப்பிலை:** ஆதிகாலத்தில் இருந்து வேப்பிலை ஒரு சிறந்த கிருமிநாசினியாகக் கருதப்படுகிறது. வேப்பிலையை அவ்விடத்தில் கொண்டு வருவதும், அதனால் விசிறி ஆரத்தி எடுப்பதும் சுகாதார முறையில் செய்யப்படுவதாகும். மேலும் இல்லத்தில் கிருமிகள் அணுகா வண்ணம் பெண் பார்த்துக் கொள்வது கடமை என்று வற்புறுத்துவதாகவும் இருக்கலாம்.

**சிறு கும்பம்:** கும்பம் கடவுளைப் பிரதிபலிப்பது. பெண்ணின் கையில் சடங்கு நிறைவுறுமட்டும் வைத்திருக்கும்படி கொடுப்பது. வாழ்க்கையில் என்றும் கடவுளை மறவாதே. கடவுள் நம்



பிக்கையோடு அன்பான வாழ்க்கை நடத்து என்று அறிவுறுத்துவதைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

**தற்கால நடவடிக்கை:**

முற்காலத்தில் கால தேச வர்த்தமானத்துக்கு ஏற்ப இந்தச் சாமர்த்தியச் சடங்கு நடத்தப்பட்டது.

தற்காலத்தில் இந்தச் சடங்கு தேவையா என்ற கேள்வி பலரிடமும் எழுகின்றது. குறிப்பாகப் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடையே இது எப்படி நடத்தப்பட வேண்டும் என்றும் நோக்க வேண்டி உள்ளது. இதனை ஒரு கலாசார நிகழ்வாகக் கருதி இக்காலத்திலும் செய்யலாம் என்று எடுத்துக்கொள்ள இடமுண்டு. ஆனால் முற்கால நோக்கங்களுக்கும் தற்காலத் தேவைகளுக்கும் மிகுந்த வேறுபாடுகள் உண்டு. தற்காலத்தில் பெண் பூப்படைந்து விட்டாள் என்று பரப்புரை செய்ய வேண்டிய தேவை இல்லை. தற்காலத்தில் உணவு வகைகளும் மிகவும் வேறுபட்டே காணப்படுகின்றன. எனவே, இந்த வைபவத்தை மிகுந்த சுருக்கமாக மரபுரீதியான ஒரு கலாசாரச் சடங்கு என்று எடுத்துக் கொண்டு நெருங்கிய குடும்ப அங்கத்தவரோடு நடத்துவதே சிறப்பாகும். பெண்ணின் ஆரோக்கிய நிலையிலும், மனோதத்துவ நிலையிலும் கவனம் செலுத்துவதே முக்கியமாகும். ஆனால் அடிப்படை நோக்கங்களை காற்றில் பறக்க விட்டுவிட்டு, பெரும் ஆடம்பரமாக இச்சடங்கைச் செய்வது "அற்பனுக்குப் பவுசு வந்தால் அர்த்தராத்திரியில் குடைபிடிப்பான்" என்பதை ஒக்கும். சிலர் சம்பவம் நடந்து மூன்று நான்கு மாதங்களின் பின்னர் பெரிய மண்டபங்களில் இச்சடங்கைச் செய்கிறார்கள். உடனுக்குடன் செய்து முடித்துவிடவேண்டிய ஒரு சாதாரண வாழ்க்கை நிகழ்வைத் தேவையற்ற முறையில் பெரிதுபடுத்தி, அவர் செய்கிறார் இவர் செய்கிறார் என்று அங்கலாய்த்து வசதி இல்லாதவர்களும் வசதி உள்ளவர்கள் போல் நடித்து அல்லற்படுவது ஏனோ தெரியவில்லை.

**பெண் பூப்பெய்துகின்ற நிகழ்வைச் சாதாரண வாழ்க்கை நிகழ்வாகக் கொள்ளல் நலம்.**

இந்த நிகழ்வை ஒரு ஆடம்பரமான நிகழ்வாகவோ அன்றி ஒரு பரப்புரை நிகழ்வாகவோ ஆக்காமல் சாதாரண வாழ்க்கை நிகழ்வாக நடை

முறைப்படுத்துவதே தகும். அந்த வகையில் கீழ்க்காணும் முறையில் இவ்வைபவத்தை நடைமுறைப்படுத்தினால் சிறப்பாய் இருக்கும்.

**1. பிள்ளை பூப்பெய்தினாள் என்று காணும்போது**

இது வீட்டில் இருக்கும் போதோ, அன்றிப் பாடசாலையிலோ, அல்லது போக்குவரவிலோ நடைபெறலாம். பாடசாலையிலானால் பாடசாலையினர் பெற்றோருக்கு உடனே அறிவிப்பார்கள். அப்படிச் செய்தி கிடைத்த போது, தாய் தந்தையர் அங்கு சென்று பிள்ளைக்கு எதுவித மனச் சஞ்சலமும் கொடுக்காத வகையில் வீட்டுக்கு அழைத்து வந்து உற்சாகமான வார்த்தைகள் பேசி, நடைபெற்றது எதிர் பார்த்த நிகழ்வு என்று விளங்கப் படுத்தி, இந்நிகழ்வு ஒவ்வொரு பெண்ணுக்கும் வாழ்க்கையில் நடக்கிற நிகழ்வு என்பதை நினைவுபடுத்தி பிள்ளையின் திகைப்பை நீக்கவேண்டும். பெற்றோர் இந்த நிகழ்வைப் பற்றி முன்னதாகவே பிள்ளைக்கு உரிய காலத்தில் தெரியப்படுத்தி வைத்திருப்பது நல்லது. குறிப்பாகப் பெற்றதாய் இதைத் தெரியப்படுத்தி வைப்பது சிறப்பாகும். தாயில்லாத இடத்தில் நெருங்கிய சொந்தக் காரப் பெண்மணி மூலம் தெரியப்படுத்துவது நல்லது. வீட்டிலே பிள்ளைக்குத் தனி அறை ஒழுங்கு செய்து அங்கே வசதியாக இருக்க ஒழுங்கு செய்ய வேண்டும். ஒரு வீட்டில் அதுவே முதல் நிகழ்வாயின் அங்கு வாழும் வயது வராத உடன்பிறப்புகளுக்கும் வீட்டில் என்ன நடக்கிறது என்பதை மெல்லினமாகச் சொல்ல வேண்டும். அவர்களிடம் ஒளிப்பு மறைப்புச் செய்யல் ஆகாது.

**2. உடன் தலைக்குத் தண்ணீர் வார்த்தல்**

தாய்மாமன் மாமியர் அருகில்லாத இடத்துத் தாய் தந்தையரே உடன் தலைக்குத் தண்ணீர் வார்க்கலாம். சம்பவம் நடந்த அன்றே பிள்ளையைக் குளியல் அறைக்கு அழைத்துச் சென்று பால் அறுகு தலைக்குத் தப்பித் தாய்தந்தையர் தலைக்குத் தண்ணீர் வார்த்து, உடை மாற்றி வழக்கமாக நீராடுவதுபோலப் பிள்ளையை நீராடச் செய்து, உடுத்த உடுப்பை அப்புறப்படுத்திக் குளியலறையைத் தூய்மை செய்தல் வேண்டும். பிள்ளையின் தலையை உலர்த்திச் சாம் பிராணிப் புகையிடல் நன்று. நீராடிய பின்னர் பிள்ளையை



அறையில் இருத்திச் சத்துள்ள உணவு கொடுத்து ஆறியிருக்கச் செய்தல் வேண்டும். தமிழ்க் குடும்பங்களில் வழமையாகக் கொடுக்கப்பட்டு வந்த மருத்துவத் தன்மையான உணவு வகைகளைத் தவிர்க்காமல் கட் டாயமாக உண்ணச் செய்தல் கடமை.

**3. சாமர்த்தியச் சடங்கு**

சம்பவம் நடந்து 14 நாட்களின் பின் (சிலர் 11ம் நாள் என்றும் சொல்வர்) இச் சடங்கைச் செய்யலாம். இதனை நெருங்கிய சொந்தக்காரர் நண்பர்களுடன் செய்தல் நலம். எக்காரணங் கொண்டும் இதனைப் பெரிதுபடுத்துதல் ஆகாது. அழைப்பிதழ்கள் அனுப்பி அழைத்தல் தேவையற்றது. தொலைபேசி அழைப்பே போதுமானது. அன்று அழைக்கப்படுவோர் பிள்ளைக்குத் தெரிந்த நெருங் கியவர்களாக இருத்தல் நலம். அன்று வீட்டைத் தூய்மை செய்து மஞ்சள் நீர் தெளித்துச் சாம்பிராணிப் புகை காட்டல் வேண்டும். ஐயர் வந்து துடக்குக் கழிக்க வேண்டிய தேவையேயில்லை. வருகை தந்த மூத்தவர்கள் அன்றைய நீராட்டு நிகழ்வில் கலக்கலாம். நீராட்டல் நிறை வுற்றபின் பிள்ளைக்குச் சேலை அணிவித்து, நகைகள் அணி வித்துச் சுவாமி அறைக்கு அழைத்துச் சென்று பஞ்ச புராணம் ஓதி பிள்ளையின் கையில் சிறுகும்பத்தைக் கையிற் கொடுத்து வந்தோர் முன் இருத்தி ஆரத்தி எடுக்கலாம்.

பிள்ளைக்கு மாலை அணிவிக்கும்போது கழுத்து மாலை அணிவிக்க வேண்டுமா, அல்லது ஆண்டாள் மாலை அணிவிப்பதா என்ற சந்தேக மும் எழுவது உண்டு. சிறீ ஆண்டாளை நித்திய கலியாண கோலத்தில் காண்பதாக வைணவர்கள் நம்புகிறார்கள். ஆண்டாள் மாலை அச்சமயச் சார்பாக எழுந்தது. சைவர்கள் ஆண்டாள் மாலை அணிவிக்கும் வழக்கம் இல்லை. பெண்கள் கழுத்தில் மாலை அணிவது அழகுக்காக. ஒரு பெண் கழுத்து மாலை அணிந்துவிட்டால், அவள் திருமணமானவள் என்று குறிப்பதல்லவே. ஒரு கன்னிப்பெண் அவளுடைய திருமணத்தின் போதுதான் கழுத்து மாலை அணிய வேண் டும் என்ற விதியும் இல்லையே. அவர்கள் விருப்பத்தின்படி மாலை அணிவிப்பதே நலம். சிறு சிறு விடயங்களில் தடம்



புரளாமல் இருப்பது அமைதி தரும்.

ஆரத்தி எடுக்கும் போது ஒவ்வொரு ஆரத்தியின் விளக்கத்தையும் மேற்கண்டவாறோ, அன்றி வேறு அதனினும் சிறப்பான தத்துவ ரீதியான விளக்கமோ சொல்லியபின் ஆரத்தி எடுப்பது சிறப்பாகும். விளக்கம் தரமுடியாத பொருட்களையோ அன்றித் தேவையற்ற சமயச் சம்பிரதாயங்களையோ நிகழ்வில் சேர்த்தல் ஆகாது. சாமர்த்தியச் சடங்கைச் சாமர்த்தியமாகச் செய்து நிகழ்வை ஒரு அடையாளக் கலாசார நிகழ்வாகக் கொள்ளல் வேண்டும். மணப்பெண்ணை அழைத்து வருவது போலத் தோழிமாரும், பூத்தட்டங்களும் தேவையற்றவை.

ஆரத்திகள் நிறைவுற்ற பின்னர் பிள்ளையை வாழ்த்தி பரிசுப் பொருட்கள் வழங்கிய பின்னர் உணவு பரிமாறப்படலாம். சைவ உணவு வழங்குவதே வழக்கம். மச்ச மாமிச உணவு தவிர்த்தல் நலம்.

**நிறைவுரை**

தமிழர்களுடைய அன்றாட வாழ்க்கையில் இடம் பெறும் நிகழ்ச்சிகளிலும், சடங்குகளிலும் அர்த்தமுள்ள எத்தனையோ மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது. ஆனால் பெரும்பாலானவர்கள் மாற்றங்களை ஏற்றுக்கொள்வதில்லை. அவற்றைப் பற்றிச் சிந்திப்பதும் இல்லை. ஏட்டிக்குப் போட்டியாகப் பேசி, குழப்பத்தின் மேற் குழப்பத்தை உண்டுபண்ணுவதே நடைமுறையாக இருக்கிறது. அந்தந்தக் காலத்திற்கு ஏற்ப நம் முன்னோர் வகுத்த சடங்குமுறைகளின் உட்கருத்துகளை உணர்ந்து, தவிர்க்க வேண்டியவற்றைத் தவிர்த்துச் சுருக்க வேண்டியவற்றைச் சுருக்கி வாழ்வதே உத்தமமாகும். வசதி இருக்கிறது, பணம் இருக்கிறது என்று சிறு நிகழ்வுகளையும் பெரிதாக்கிக் களியாட்டமாக்குவது சிறப்பாகாது. ✣



# The good, the bad and the trans- fat


Dietary cholesterol and saturated fats are major dietary factors involved in raising blood cholesterol levels and the risk of coronary heart disease. But did you know that there is another artery clogging fat called trans-fat?

Fats are an important source of calories and help the body absorb vitamins A, D, E, and K, essential fatty acids and anti-oxidants. Fats are essential for the growth, development and maintenance of our bodies. As a food ingredient, fat provides taste, texture, consistency, stability and satiety.

Basically there are two types of fats; saturated and unsaturated. While most animal foods and some plants contain saturated fat, many of the plant oils contain primarily unsaturated fat.

Animal foods also contain dietary cholesterol which, along with saturated fat increases the blood cholesterol, especially the 'bad' cholesterol (LDL).


Trans-fat is created when liquid plant oils are hydrogenated (meaning hydrogen added) to harden them or to turn liquid fat into solid. Trans-fats provide "mouth feel", texture (flakiness in pastries for




example) and flavour stability for foods and hence many food companies prefer to use them in place of oil. Restaurants like it because they can reheat them repeatedly without breaking down.

Trans- fat also occurs naturally in small amounts, primarily in animal-based foods. Most trans- fat is hidden in processed foods. Bakery products (40%), such as cakes, biscuits, pastries, crackers, pies, slices, etc., are in the top of the list followed by animal products (20%) and fried items (~15%), such as French fries, potato and corn chippies. In other words, all foods made with or fried in partially hydrogenated oils contain trans- fat.

Trans- fats are worse than saturated fats for clogging arteries. They raise 'bad' cholesterol and lower 'good' cholesterol levels in the blood. As well as increasing the risk of heart disease, they can also increase the risk of type 2 diabetes, arthritis, fatigue, cancer and other serious chronic heath problems.




A safe level of trans- fats is not currently known and not all food products list trans-fats on the nutrition label although in the USA it will be a requirement from Jan 2006. Interestingly, there are no labelling requirements for fast foods, which contain high levels of trans- fat. Fast food can even be advertised as being cooked in vegetable oil and so would appear to be cholesterol free. Currently there is agitation in North America to ban trans- fats altogether. Technologically it is possible to reduce trans-fat levels and efforts are being made by several big companies, but it takes time.



Eliminating trans-fats from your daily diet is not practical. As always, moderation is the key to better health. Here are some tips:

As a general rule, at least 50% of your total daily energy ( 2000 calories) intake should come from complex carbohydrate sources high in natural fibre and starch. Fat should contribute to less than 30% of daily energy intake, with saturated fat and trans- fat accounting for less than 10% and 2% respectively of that. Protein should make up remaining energy, typically more than 10%. Refined sugars, salt and foods rich in cholesterol should be minimised, while ensuring you intake adequate vitamins and minerals.

Read nutrition labels and choose foods with lower amounts of saturated fat, trans-fat and cholesterol as part of a healthy diet. A food low in saturated fat will be low in trans-fat as well.

Read ingredient labels to see if shortening, partially hydrogenated or hydrogenated oils are used. The higher up in the list these appear, the more trans-fat there is.

Gradually replace these fats with natural, less processed vegetable oils such as extra-virgin olive, olive, sesame, sunflower, peanut, flax, etc and nuts.

Choose foods based on nutritional value and not just taste.

Dr Rana Ravindran is a senior lecturer in the Institute of Food, Nutrition and Human Health, Massey University.

# இந்துக் கோயில்களில் சண்டேசுவர நாயனாரை ஏன் வணங்குகிறோம்?

# இவர் யார்?

- ராணி தங்கராசா

**தி**ருச்சேய்ஞலூர் எனும் திருத்தலம் மிகவும் சிறப்பும் பெருமையும் கொண்டது. திருச் சேய்ஞலூர், திரு - சேய் - நல் - ஊர் எனப் பிரியும். இங்கு நன்கு வேதம் கற்றவர்கள் ஐம்புலன் களும் வெல்லும் வழியில் அவர்கள் செல்லாது ஐம்புலன் களும் தம் பின்னால் வரும் தகைமை வாய்ந்தவர்கள்.

இப்பகுதியில் எச்சதச்சன், மறையவர் குலத்தவர் தன் மனைவி பவித்திரையுடன் சந் தோசமாக வாழ்ந்து வந்தார். இவர்கள் செய்தவத்தால் ஓர் அழகிய மகன் அவதரித்தான். விசாரசருமர் என நாமம் சூட்டி கண்ணென காத்தனர். ஐந்து வயது நிரம்பியபோதே நல் ஒழுக்கம், வேதாகமங்களின் உட்பொருள் ஈடுபாடு, உயிர்களிடத்தில் அன்பெனப் பல வழிகளிலும் உயர்ந்து விளங்கினார். மகனுக்கு ஏழு வயதானதும் தந்தையார் உபநயனம் செய்து வேதத்தை விபரமாகக் கற்றுக்கொள்ள ஆசிரியர்களிடம் அனுப்பினார். அவரோ ஆசிரியர்கள் கூறு முன்னரே உண்மைப் பொருளை எல்லாம் அறிந்துகொண்டார். ஆசிரியர்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.





விசாரசருமர் ஒருநாள் சக மாணவர்களுடன் சென்று கொண்டிருந்தபோது வழியில் ஓர் இடத்தில் ஊரவர்களின் பசுக் கூட்டம் சென்று கொண் டிருந்தது. அக்கூட்டத்தில் இளங்கன்றை உடைய பசு ஒன்று மாடு மேய்த்தவனை தன் கொம்பினால் முட்டியது. கோபம் கொண்டவன் சிறிதும் இரக்கமின்றி அப்பசுவை அடித் தான். அதனைக் கண்டு மனம் மிகவும் நொந்த சருமர் அடித் தவனைக் கண்டித்து பசுவையும் மேலும் அடிபடாமல் விலக் கினார். பசுக்கள் உலகில் வாழும் சகல உயிர்களிலும் மேலான மென்மையும், பெருமையும் உடையன. எல்லா உயிர்களின் மலங்களும் அருவருப்புடையன. ஆனால் பசுவின் சாணம் புனித மானது. ஏனைய மலங்களின் அசுத்தத்தை பசுவின் சாணங் கொண்டு சுத்திகரிப்பர். பசுவின் பாலில் இருந்து நாம் பெறும் பலன்கள் பலவன்றோ. ஆயனை விலக்கிவிட்டு மாடு மேய்க்கும் பணியை சருமரே ஏற்றுக்கொண்டார். நல்ல புற்கள் உள்ள இடங்களில் மேய விட்டார், தண்ணீர் காட்டினார். பால் கறக்கும் நேரத்தில் பசுக் களை அவரவர் வீடுகளில் சேர்ப் பதுடன் இரண்டு மடியின் பாலை கன்றுகளுக்கும் மறு இரண்டு மடியின் பாலை மட்டும் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என அறிவுரையும் வழங்கிச் செல்வார். பசுக்களும் அவர் பராமரிப்பில் மகிழ்ந்து தங்கள் கன்றுகளை நினைத்து கவலை கொள்ளாது மறைக் கன்றாகிய சருமரைக் கண்டு உருகி மடிசுரந்து கறவாமலே பாலைப் பொழிந்தன. இதனைக் கண்டவர் ஆச்சரியமுற்றார். வீணே கழியும் பாலை சிவ பிரானுக்கு திருமஞ்சனம் செய் தால் நன்றல்லவா என யோசித் தார். அத்துடன் பூசை செய்யும் ஆவலும் மனத்தில் உதித்தது. நினைத்தவற்றை செயலாக்க முற் பட்டார்.

மண்ணி ஆற்றங்கரையில் ஆத்தி மரத்தின் அடியில் மண லால் கோயிலும் சிவலிங்கமும் அமைத்தார். அருகில் உள்ள நறுமலர்களைத் தானே பறித்து வந்தார். புதிய குடங்களைக் கொண்டு பசுக்களின் அருகே போனதுமே மடியில் கை படாமலே பசுக்கள் பாலைத் தாராளமாகப் பொழிந்தன. மணலினால் நிறுவிய சிவலிங்க மூர்த்திக்கு திருமஞ்சனம் செய் தார். அர்ச்சித்து இனிய துதிகளைக் கூறி வழிபாடு புரிந்தார். அவரது அன்பு கலந்த பூசையை எம்பிரான் ஏற்று மகிழ்ந்தார். சருமர் சிவபூசை செய்து வந்ததை அயலான் ஒருவன் கண்டான். அவரின் உண்மைத்திறனை

அறிந்துகொள்ள முடியாத அறிவிலி அதனை அவ்வூர் பொதுச் சபையில் கூடியிருக்கும் பெரியவர்களிடம் கூறினான். அவர்களும் தீர விசாரியாது விசாரசருமர் மாடுகளை மேய்த்து வருவதாகக் கூறி பசுக்களைக் கூட்டிப் போய்ப் பாலைக் கறந்து வீணாக்குகிறான் என தந்தை யாரிடம் முறையிட்டனர்.

மறுநாள் மகன் பசுக்களை மேய்ச்சலுக்கு ஓட்டிச் சென்றார். தந்தையார் மகன் அறியா வண்ணம் பின் தொடர்ந்தார்.

சருமர் மாடுகளை மண்ணி ஆற்றின் அருகில் கூட்டிச் சென்றார். எச்சதச்சன் ஓர் மரத்தில் ஏறி ஒளிந்து கொண்டார். சருமர் வழமை போல் பாலை நிரப்பி அபிசேகம் செய்தார். அதனைக் கண்ட தந்தையார் கடுங்கோபம் கொண்டார். மகனின் இறை அன்பைப் புரியாமல் மகனின் முதுகில் பெரிய தடியால் அடித்தார். விசாரசருமரோ ஐம்புலன்களையும் அடக்கி இறைவன் பூசையில் ஆழ்ந்திருந்தமையால் தகப்பனார் அடித்ததை உணர்ந்தாரில்லை. பலமுறை அடித்ததையோ அவர் திட்டியதையோ அறியாதவர் பாற் குடங்களால் பரமனுக்கு அபிசேகம் செய்தார். அதனைக் கண்ட தந்தையார் திரு மஞ்சனக் குடங்களை தன் காலினால் தட்டிவிட்டார். இறைவனிடம் ஒன்றியிருந்தவர் தன் வழிபாட்டிற்குத் தடை ஏற்பட்டதை உணர்ந்தார். நிந்தைமிக்க இக்கொடுமையைச் செய்தவர் தன் தந்தையேயென அறிந்தார். சிவகுற்றம் புரிந்த வரை தந்தையென மதிக்கவில்லை. அவரது காலே குடங்களைத் தட்டினதாயிற்றே. கோலை எடுத்தார். சிவமயமாக நிற்கும் அவருடைய சங்கல்பம் சிவசங்கல்பமன்றோ, அதனால் அவர் எடுத்த கோல் ஆயுதமாகியது. அதனால் தந்தையின் காலை வெட்டினார். எச்சதச்சன் வேரற்ற மரம் போல் வீழ்ந்து இறந்தார்.

பூசைக்கு இனிமேல் இடையூறில்லையென உணர்ந்தவர் மீண்டும் பூசையைத் தொடர்ந்தார்.

பூத கணங்கள் புடைசூழப்
　　புராண முனிவர் புத்தேளிர்
வேத மொழிகள் எடுத்தேத்த
　　விமல மூர்த்தி திருவுள்ளம்
காதல் கூர்ந்தே வெளிப்படலும்
　　கண்டு தொழுது மனங்களித்துப்
பாத மலர்கள் மேல் விழுந்தார்
　　பக்தி முதிர்ந்த பாலகனார்.

பூதகணங்கள் சூழ, இமையவரும் வேதமொழிகள் ஓதித்துதிக்க, சிவனார் உமை அம்மையுடன் காட்சியளித்தார். மனம் மகிழ்ந்த பாலகன்





பரமன் பாதமலர் மீது வீழ்ந்து வணங்கினான்.

இறைவன் அன்பு மேலிட அவரைத் தழுவி, "மகனே, என்மீது கொண்ட அன்பின் மிகுதியால் பெற்றவன் என்றும் பாராது தந்தையை அழித்து விட்டாய். உன் எல்லையில்லா அன்பிற்கும் பக்திக்கும் கட்டுப்பட்டோம். உனக்கு தந்தையும் தாயும் நானே" என்று திருவாய் மலர்ந்தருளி உச்சி மோந்தார். விசாரசருமரின் கண்களிலே ஆனந்தக் கண்ணீர் பெருகியது. அம்மையப்பரின் அரவணைப்பில் அந்தணர் குல மைந்தர் சிவப்பழமானார். எம் பெருமான் விசாரசருமருக்கு அருள் புரிந்தார்.

அணர்பிரானும் தொண்டர் தமக்
கதிபனாக்கி, "அனைத்து நாம்
உண்ட கலமும் உடுப்பனவும்
சூடுவனவும் உனக்காகச்
சண்டீசனுமாம் பதந்தந்தோம்"
என்றங் கவற்பொற்றட முடிக்குத்
துண்ட மதிசேர் சடைக் கொன்றை
மலர் மாலை கழைந்து சூட்டினார்.

"நம் தொண்டர்களுக் கெல்லாம் தலைவனாகி விட்டாய் நீ. நாம் உண்ட கலமும், உடுப்பனவும், சூடுவனவும், உனக்கே உரிமையாகும்படி செய்தோம்." சண்டீசபதமும் வழங்கினார். தம் திரு முடியில் இருந்து கொன்றை மலர் மாலையையும் எடுத்து அன்புச் சிறுவனின் கழுத்தில் தன் திருக்கைகளாலேயே அணிவித்தார்.

சண்டீசபதம் என்பது ஒரு பதவி. உமாதேவியார், விநாயகர், முருகப்பெருமான், சூரியன் இவர்களுக்கும் தனித் தனியே சண்டீசபதம் உண்டு. அந்தந்த மூர்த்திகளின் சண்டீச பதவியில் உள்ளவர்கள் அந்தந்த மூர்த்திகளை வழிபடுவோர்க்கு அவ்வழிபாடுகளின் பயனை அளித்து அருள்புரிவர். சண்டேசுவரர் கூப்பிய கரங்களுடன் எப்பொழுதும் தியானத்தில் இருப்பவர். அவர் சிவன் கோவில் களில் தவணி சண்டேசுவரர், அம்பிகையின் கோவில்களில்

தாரிகா சண்டேசுவரர், விநாயகர் கோவில்களில் கும்போதர சண்டேசுவரர், முருகன் கோவில்களில் சுமித்திர சண்டேசுவரர் என அழைக்கப்படுவார்.

சண்டேசுவரர் நாம் தெய்வத்திற்குப் படைத்தவற்றை பூசை முடிந்ததும் நிர்மாலியமாக ஏற்றுக்கொண்டு தரிசனம் செய்த பலனைத் தருபவர். பூசை முடிந்ததும் அவரிடம் செல்ல வேண்டும். அவர் எந்நேரமும் சிவ தியானத்தில் இருப்பதால் அவர் கவனத்தை எம்பால் ஈர்ப்பதற்காக மூன்று முறைகள் கைகளைத் தட்டுவது வழக்கம். இறைவனுக்கு நாம் படைத்தவற்றை சண்டேசுவரரிடம்ஒப்படைக்கவேண்டும். அவர் நிர்மாலியமாக ஏற்றுக் கொண்டு தரிசனம் செய்த பலனைத் தருவார். தம் உடைமைகளிலுள்ள பாசம், பற்றை விட்டு



இறைப்பற்றை வேண்டுவதற்காகவே தமது ஆடைகளில் இருந்து ஒரு துண்டு நூலை எடுத்து சண்டேசுவரர் வாசலில் போடுவது வழக்கம்.

அதாவதுபாசநூல்களைப்பட்டு இறைவனைப் பற்றவேண்டுமென்பது. இவ்வழக்கம் ஆதி தொட்டு இருந்ததில்லை எனவும் இடையிட்டே வந்ததென்பதும் சில அறிஞர்களின் கூற்று. மனத் திடம் கொண்டவர்கள் அவற்றை மனத்தால் செய்வதாகப் பாவனை செய்து வணங்குவர்.


சண்டேசுவரரை வலம் வந்து வணங்குதல் முறையன்று எனவும், மூலஸ்தானத்திற்கும் சண்டேசுவரருக்கும் இடையே குறுக்கால் போகக் கூடாதென்பதுவும் விதிமுறை. இதே போல் நந்திக்கும் மூலஸ்தானத்திற்கும் இடையே நின்று வணங்குவதும் குறுக்கே போவதும் தவிர்க்கப்பட வேண்டும்.

எச்சதச்சன் தான் செய்த அபச்சாரத்திற்குரிய தண்டனையைத் தன் மகன் கைகளாலேயே பெற்று, பின்னர் அதனால் பாவம் நீங்கி சிவலோகமடைந்தார்.

விசாரசருமர் எமையாளும் இறைவன் திருவருள் அணைப்பிலே என்றும் அவரது மகனாய் தோன்றிப் பிறவாப் புகழ் பெற்று இறைவன் தாளினை அடைந்தார்.

'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' - வான்புகழ் வள்ளுவப் பெருமான் வாக்கன்றோ.

★



# நான் தயார்



**அ. முத்துலிங்கம்**

**நா**ன் கனடாவில் சந்தித்த பல பிரச்சினைகளுக்கு என்னைத் தயார்ப்படுத்தி வைத்திருக்கவில்லை. ஒரு பிரச்சினை தீர்ந்ததும் இன்னொரு புதுப் பிரச்சினை கிளம்பியது. இவையெல்லாம் தொழில்நுட்ப வளர்ச்சியால் ஏற்பட்டவை என்பதால் அவை நாளுக்கு நாள் கூடினவே ஒழிய குறையும் வழியாகத் தெரியவில்லை.

ஆப்கானிஸ்தானில் என்னுடன் ஒருவர் வேலை பார்த்தார். நல்ல மனிதர். எங்கள் அலுவலகத்தில் வேலை செய்த அத்தனை பேரும் அவரைப் பாடாய்ப் படுத்துவார்கள். அவர் ஒன்றுமே பேசமாட்டார். அவருடைய மொழியில் நாளை என்பதற்கும் நேற்று என்பதற்கும் ஒரே சொல். அந்தக் குழப்பத்தால் அவர் ஆங்கிலத்தில் பேசும்போது 'நாளை' என்பதற்கு 'நேற்று' என்றும் 'நேற்று' என்பதற்கு 'நாளை' என்றும் மாற்றிச் சொல்லி விடுவார். கேட்பவருக்கு ஒரே குழப்பம். இப்படியிருக்க அவரால் 'முந்தாநாள்' என்பதையோ 'நாளை மறுநாள்' என்பதையோ எப்படிச் சொல்ல முடியும். மனுசர் திணறிவிடுவார். முந்தாநாள் என்பதை நேற்றைக்கு அடுத்த நாள் என்றும் நாளை மறுநாள் என்பதை நாளைக்கு முதல்நாள் என்றும் கூறுவார். எத்தனை முறை படித்துப் படித்துச் சொல்லியும் அவருக்கு புத்தியில் ஏறவில்லை. இறுதியில் குழப்பத்தைத் தவிர்க்க அலுவலகத்தில் உள்ள அத்தனை பேரும் அவரைப் போலவே பேசப் பழகிக் கொண்டோம்.

மனது வைத்தால் எதையுமே பழகிக் கொள்ளலாம். உதாரணத்திற்கு என்னுடைய தூசி உறிஞ்சி விவகாரத்தை எடுத்துக் கொள்வோம். ஒருநாள் காலை என் மனைவி தலையில் கையை வைத்துக்கொண்டு யோசனையோடு உட்கார்ந்திருந்தார். என்னவென்று கேட்டேன். வீட்டில் தூசி உறிஞ்சி வேலை செய்யவில்லை என்றார். அது என்ன

செய்யவேண்டுமோ அதற்கு எதிரான காரியத்தைச் செய்தது. தூசியை உறிஞ்சி எடுப்பதற்கு பதிலாக தூசியை வெளியே கொட்டியது. குட்டிநாய் சக்குவது போல தரைவிரிப்பு முழுக்க குப்பை. என்னவென்று பார்த்தால் தூசி உறிஞ்சி பை நிரம்பிவிட்டது. என் பிரச்சினையும் ஆரம்பமானது.

சரி, பை வாங்குவோம் என்று கனடாவின் பிரபலமான நிறுவனம் ஒன்றுக்குச் சென்றால் அங்கே நூற்றுக்கணக்கான பைகள் இருந்தன. ஆனால் என்னுடைய தூசி உறிஞ்சிக்கு எது பொருந்தும் என்பது தெரியவில்லை. விற்பனைக்காரர் “என்ன மொடல், என்ன சைஸ்?” என்று கேட்டார். சரி என்று வீட்டுக்கு வந்து பழைய பையை மாத்திரம் தூக்கிப் போகாமல் முழுத் தூசி உறிஞ்சியையும் காவிக்கொண்டு போனேன். கடைக்காரர் என்னைக் கிட்ட அணுகவிடாமல் தூரத்திலேயே வைத்து "இந்த மொடல் எப்பவோ வழக்கழிந்து போய் விட்டது. இதற்குப் பை வாங்க முடியாது. வேறு தூசி உறிஞ்சி வாங்குவதுதான் உத்தமம்" என்றார். அவர் பல்லிலே ஏதோ நூலை வைத்துக் கடிப்பது போல வாயைத் திறக்காமலே பேசினார்.

இனி என்ன செய்வது. சரி என்று புதுத் தூசி உறிஞ்சி ஒன்றையும் அதற்குப் பாவிப்பதற்காக இரண்டு வருடகாலம் தாக்குப் பிடிக்கும் பைகளையும் வாங்கிக்கொண்டு புறப்பட்டேன். அத்துடன் பிரச்சினை தீர்ந்தது என்று நீங்கள் நினைக்கிறீர்கள். இல்லை, அப்போதுதான் ஆரம்பமானது. ஆறு மாதத்தில் தூசி உறிஞ்சி உடைந்து போனது. இப்போது என்னிடம் 18 மாதம் தேவையான பைகளும், இரண்டு பாவிக்க முடியாத தூசி உறிஞ்சிகளும் ஒரு தும்புக்கட்டும் உள்ளன. தும்புக்கட்டு மொடல் மாறாது என்று உத்தரவாதம் தந்திருக்கிறார்கள்.

சில வருடங்களுக்கு முன்னர் சவரக்குச்சி வாங்கப் போனபோதும் இதேதான் நடந்தது. கடைக்காரர் எனக்குத் தெரிந்தவர். 'என்ன வேணும்? சாதாரண சவரக்குச்சியா அல்லது ரஜினிகாந்த் குச்சியா?' என்றார். நான் திடுக்கிட்டுவிட்டேன். ரஜினிகாந்த் சவரக்குச்சி வியாபாரம் ஆரம்பித்த விசயம் எனக்குத் தெரியாது. ஔவையாரிடம் சுட்ட பழம் வேணுமா, சுடாத பழம் வேணுமா என்று கேட்ட மாதிரி என்னை சோதனை செய்கிறார் என்று புரிந்து கொண்டேன். கடைசியில் என்னதான் நடக்கிறது பார்க்கலாம் என்று 'ரஜினி மொடல்' என்றேன். அவர் ஒரு சவரக்குச்சியைக் கையிலே தந்து 'நீங்கள் ஒருமுறை சவரம் செய்தால் இரண்டு முறை செய்ததற்கு சரி'



என்றார். அந்தக் குச்சியில் இரண்டு பிளேட் பூட்டியிருந்தது.

ஆறு மாதத்திற்குப் பிறகு பிளேட் வாங்க அதே கடைக்குப் போனால் பிளேட் இல்லை. ஏனென்றால் மூன்று பிளேட் வைத்த சவரக்குச்சி வந்துவிட்டது. சரி என்று அந்தக் குச்சியை வாங்கிப் போனேன். அதுவும் சில காலத்துக்குள் வழக்கொழிந்து விட்டது. நாலு பிளேட் வைத்தது வந்தது. அதுகூட நிலைக்கவில்லை. இப்போது என்னிடம் இருப்பது 5 பிளேட் வைத்த சவரக் குச்சி. அத்துடன் அதில் ஒரு பற்றறியும் பொருத்தி இயங்குகிறது. ஐந்து குதிரை பூட்டிய ரதம் போல இந்த சவரக்குச்சி என் கன்னத்தில் ஓட பற்றறி ஒரு மெல்லிய அதிர்வைக் கொடுக்கிறது. கன்னத்து மயிர்க் கால்களை 'கிழங்கோடும் அள்ளிப் பறித்து' (ஆண்டாள் மன்னிப்பாராக) கன்னத்தை மழமழவென்று ஆக்குகிறது. இனிமேல் ஏழு பிளேட் வைத்த சவரக்குச்சி வரப்போகிறது என்று பயமுறுத்துகிறார்கள். இது எங்கே போகிறது? 'ஒரு சவரம் செய்தால் நூறு சவரம் செய்ததற்குச் சரி' என்று சொல்லும் காலம் வந்தாலும் வரலாம் என்று உடம்பு நடுங்குகிறது.

இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். எங்கள் வீட்டுக்கு வரும் தண்ணீர் ஒரு வடிகட்டி மூலம் போய் குளிர் பெட்டியில் ஏறுகிறது. இந்த வடிகட்டியை மூன்று மாதத்திற்கு ஒருமுறை மாற்ற வேண்டும் என்று சொன்னார்கள். நானும் அப்படியே அவர்கள் கட்டளைப்படி மாற்றி வந்தேன். கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதைத் தவிர எனக்கு வேறு என்ன பெரிய வேலை. ஒருமுறை அந்த ரக வடிகட்டி உற்பத்தியை நிறுத்திவிட்டார்கள். வேறு வடி கட்டியை வாங்கி அதைப் பூட்டுவதற்காகக் குழாயை மாற்ற வேண்டி வந்தது. மறுபடியும் வடி கட்டியை மாற்றினார்கள். மறு படியும் குழாயை மாற்றினேன். இப்படியே இந்தப் பிரச்சினை உலகத்தில் தண்ணீர் இருக்கு மட்டும் தொடரும் என்று உத்தரவாதம் தந்திருக்கிறார்கள்.

கம்ப்யூட்டர் விசயத்தைக் கேட்கவே வேண்டாம். இதுபற்றி எல்லோருமே எழுதி விட்டார்கள். என் ஐயா அடிக்கடி சொல்வார் 'ஒன்று உடையாவிட்டால் அதை பழுதுபார்க்காதே' என்று. இங்கே அதற்கு எதிர்மாறாகத்தான் எல்லாம் நடக்கிறது. கம்ப்யூட்டர் நல்லாய்த்தானே வேலை செய்கிறது. ஆனால் மாற்றிவிடுவார்கள். எல்லோரும் புது மொடலுக்கு மாறிவிடுவார்கள். ஆகவே நீங்களும் மாறியே ஆகவேண்டிய நிர்ப்பந்தம்.

வைரஸ்கள் வந்து சேருகின்றன என்று வைரஸ் தின்னியை வாங்கிப் பூட்டினேன். இது ஒரு

வருட காலம் புது வேலைக்காரன் போல நன்றாகவே வேலை செய்தது. இப்போது அதுவாகவே ஒரு புதிய வைரஸை அடைகாத்து வெளியே விட்டிருக்கிறது. அதைக் கொல்ல இன்னொரு வைரஸ் தின்னி வாங்கி ஏற்றியிருக்கிறேன். அதுவும் ஒரு வருடகாலத்தில் இன்னொரு புதிய வைரஸை வெளியே விடும். அதற்கும் நான் காசு கொடுத்து தின்னி வாங்க வேண்டும். இதைக் கேட்பார் இல்லை.

செல்பேசிக் கதை வேறு. அவசரமாக ஒரு கடைக்குள் நுழைந்து செல்பேசி வாங்க முடியாது. ஆயிரம் வகைகள் வந்துவிட்டன. எல்லாவற்றையும் ஆராய்ச்சி செய்து ஒன்றை வாங்க அரை நாள் பிடிக்கும். அந்த அரை நாளில் புதிய மொடல் வந்து சேர்ந்துவிடும். செல்பேசியில் நூறு வசதிகள் இருக்கின்றன. அவற்றிலே அரைவாசி வசதிகளைக் கற்றுத் தேர்ந்து அனுபவிக்கத் தொடங்குமுன் இன்னொன்று வந்துவிடுகிறது. 120 வசதிகளுடன்.

முன்னேற்றம், வளர்ச்சி என்று போட்டிகள் அதிகமாகிவிட்டன. உற்பத்தியில் அவசரம் கூடிவிட்டது. ஆராய்ச்சி செய்து பெற்ற முடிவுகளை ஆற அமர பரிசோதித்துப் பார்க்கக்கூட நேரம் இல்லை. போட்டியாளர் முந்திவிடுவாரோ என்ற பயம். எல்லாவற்றையும் பயனர் தலையிலேயே கட்டிவிடுகிறார்கள். சமீபத்தில் ஃபோர்ட் மோட்டார் கம்பனி 40,000 வெடிப்பு கண்ட கார் சில்லு மூடிகளைத் திரும்பப் பெற்றிருக்கிறது. குறைபாடுள்ள பற்றறி பொருத்திய டெல் கம்ப்யூட்டர்கள் திடீரென்று வெடித்துப் பற்றி எரிய ஆரம்பித்துவிட்டன. அவற்றை எல்லாம் இப்பொழுது கம்பனி திரும்பப் பெற்றிருக்கிறது.

எல்லாம் அசுரவேகத்தில் மாறுகின்றன. தொலைக்காட்சி மாறுகிறது. ரேடியோ மாறுகிறது. டிவிடி பெட்டி மாறுகிறது. கண் பரிசோதிக்கும் ஒவ்வொரு முறையும் புதுக்கண்ணாடி வாங்க வேண்டி நேருகிறது. புதுக்கண்ணாடி வில்லை மேம்படுத்தப்பட்டது. அதைப் பழைய சட்டத்தில் மாட்ட முடியாது என்று சொல்கிறார்கள். மாறும் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் திண்டாட வேண்டியிருக்கிறது. அன்றிலிருந்து இன்று வரை மாறாமல் இருப்பது புட்டுக் குழல் ஒன்றுதான்.

என் புலம்பலைக் கேட்ட நண்பர் என்னை வியப்புடன் பார்த்தார். அவர் சம்மதிக்கவில்லை. நான் சொல்வதை நிராகரித்தார்.

'ஆடை வாங்குவதற்கு முன்னால் அதைத் திருத்த முடியாது. விஞ்ஞானம் முன்னேறிக் கொண்டேயிருக்கும். புதுப்புதுக் கண்டுபிடிப்புகளும் வந்தே தீரும். அதை ஒருவருடைய வசதிக்காக எப்படி நிறுத்த முடியும். இன்று உலகம் இவ்வளவு முன்னேறியிருக்கிறது என்றால் அது விஞ்ஞானத்தினால் சாத்தியமானதே.'

'நான் அதை மறுக்கவில்லை. பொருட்கள் பாவனைக்கு மேம்பாடடைய வேண்டியது அவசியம்தான். ஆனால் அந்த வேகம் அவசியமா? முதல் வாய் உணவை விழுங்கி முடிக்கு முன்னர் அடுத்த வாய் உணவை எப்படித் திணிப்பது?'

'அதை நீங்களும் நானும் தீர்மானிக்க முடியாது. சந்தையல்லவோ தீர்மானிக்க வேண்டும்.'

நான் சொன்னேன். 'கடந்த ஐந்து வருடங்களில் நான் இரண்டு செல்பேசிகள் மாற்றினேன். நீங்கள் எத்தனை மாற்றினீர்கள்?'

நண்பர் 'ஐந்து' என்றார்.

'அதாவது வருடத்திற்கு ஒன்று. அடுத்த ஐந்து வருடங்களில் எத்தனை மாற்றுவீர்கள்? பத்து வாங்குவீர்களா?'

'கூடும். சந்தையே அதையும் தீர்மானிக்கும்' என்றார்.

அவர் சொல்வதிலும் உண்மை இருந்தது. உலகத்தின் வேகத்தை நிறுத்தி வைக்க முடியாது. ஆர்தர் சி கிளார்க் என்ற



விஞ்ஞானி (இவர் ஐம்பது வருடங்கள் கொழும்பில் வசித்து சமீபத்தில் இறந்துபோனார்.) சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. ஆகத் தூரத்தில் இருக்கும் ஒரு நட்சத்திரத்துக்கு விண்வெளிக் கலம் ஒன்றை அனுப்புகிறார்கள். அது போய்ச்சேர 200 வருடங்கள் எடுக்கும் என்று கணிக்கப்பட்டது. மேலும் பத்து வருடங்கள் கழித்து விஞ்ஞானிகள் அதனிலும் இரண்டு மடங்கு வேகமான ஒரு விண்வெளிக் கலத்தை உண்டாக்கி விடுகிறார்கள். அதையும் அனுப்புகிறார்கள். அது புறப்பட்டு முதல் கலத்தையும் முந்திச் செல்கிறது. இன்னும் சிறிது காலத்தில் விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தால் அதிவேகம் கூடிய கலத்தைச் செய்து அதையும் அனுப்புகிறார்கள். அது முந்தைய இரண்டையும் முந்திக்கொண்டு செல்கிறது. இப்படி அனுப்பிக் கொண்டேயிருக்கலாம். ஆகவே, முதலில் அனுப்பிய கலங்கள் எல்லாமே வீண். அவற்றை அனுப்பாமல் விட்டிருக்கலாம் அல்லவா? இதுதான் கேள்வி.

உண்மை என்னவென்றால், விஞ்ஞானம் படிப்படியாக வளர்ந்து கொண்டிருக்கிறது. முதல் கலத்தை உண்டாக்கியிராவிட்டால் அடுத்த கலம் தயாரித்திருக்க முடியாது. முதல் கலத்தின் தொழில் நுட்பம்தான் அடுத்த கலத்தின் முன்னேற்றத்துக்கு உதவியிருக்

கிறது. விஞ்ஞானம் என்பது ஒன்றின் தோளில் ஒன்று ஏறி வளருவதுதான்.

மூர் என்பவருடைய தேற்றம் பிரசித்தமானது. அது என்ன சொல்கிறது என்றால், ஒவ்வொரு 18 மாதமும் கம்ப்யூட்டரின் செயல்திறன் இரண்டு மடங்கு அதிகரிக்கிறது. கடந்த 50 வருடங்களில் இந்தத் தேற்றம் திருப்பித் திருப்பி நிரூபணம் ஆகியிருக்கிறது. வரப்போகும் 50 வருடங்களில் உலகம் எங்கே நிற்கும் என்பதை யோசித்துப் பார்க்கவே மலைப்பாக இருக்கிறது. காலையில் தினமும் செய்தித்தாள் வாங்குவது போல ஒவ்வொரு நாள் காலையிலும் ஒரு புதுக் கணினி வாங்கினாலும் தொழில்நுட்ப வேகத்தை எட்டிப்பிடிக்க முடியாமல் போய்விடும்.

இந்த வேகமும், முன்னேற்றமும் மற்ற தொழில் நுட்பங்களில் கிடையா. உதாரணத்திற்கு கார். அந்தக் காலத்தில் இருந்து இந்தக் காலம் வரையும் உற்பத்தியாகும் கார்கள் தொழில்நுட்பத்திலும், வசதியிலும் எவ்வளவு தூரம் முன்னேறியிருந்தாலும் அவற்றின் வளர்ச்சி வேகம் கம்ப்யூட்டர் வேகத்துக்குச் சரியாக இல்லை.

கிறிஸ்தோபர் இவான்ஸ் என்பவர் இதைக் கணித்திருக்கிறார். கார்களும், கம்ப்யூட்டர்போல தொழில்நுட்ப வளர்ச்சியிலும், விலையிலும் மாற்றமடைந்திருந்தால் இன்று ஒரு ரோல்ஸ் ரோய்ஸ் காரின் விலை இரண்டு டொலராக இருக்கும். அந்தக் கார் ஒரு கலன் பெட்ரோலில் 30 லட்சம் மைல்கள் ஓடும்.

விஞ்ஞானத்தை நிறுத்தி வைக்க முடியாது. அதன் வளர்ச்சிக்கு என்னைத் தயார் செய்வதுதான் ஒரே வழி. என்னையும், என்னைச் சுற்றியிருக்கும் பொருட்களையும் நான் மாற்றிக்கொண்டே இருக்க வேண்டும். மேம்படுத்த வேண்டும். நான் காலை எழுந்ததும் கதவுக் குமிழ்களை ஆராய்கிறேன். அவை வேலை செய்கின்றன. மாற்றத் தேவையில்லை. சமையலறை மின் அடுப்பு வளையம் வேலை செய்கிறது. மாற்றத் தேவையில்லை. புகை அபாயமணி வேலை செய்கிறது. மாற்றத் தேவையில்லை. நாற்காலி கால்கள் நாலும் துடிப்பாக வேலை செய்கின்றன.

மாறிக்கொண்டே வருவது உலக இயல்பு. உலகத்துடன் மாறுவதற்கு நானும் என்னைப் பழக்கப்படுத்தி வருகிறேன். பொழுது புலரும்போது இந்த நாள் எனக்கு என்ன புது அதிசயம் வைத்திருக்கிறது என்று தெரியாது. ஆனால் எந்த மாற்றத்தையும் சந்திக்க என்னைத் தயார்ப்படுத்துகிறேன். இன்று நான் தயார் நேற்றைக்கு அடுத்த நாளும் தயார். நாளைக்கு முதல் நாளும் தயார்.

✷


# அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Australian Society of Graduate Tamils (ASOGT)

## பல்கலைக்கழக நிதியுதவித் திட்டம் (Unifund Project) (Since 1991)

The 'Unifund' project was established by the Sydney University Tamil Society (SUTS) in 1991, following a request from Vice Chancellor of the University of Jaffna. Prof. Thurairajah. This was a project to help the disadvantaged university students by University Students in Sydney. The Australian Society of Graduate Tamils (ASoGT) took over the project it 2002. This project bridges the University Tamil students in our homeland and students in the Tamil Diaspora.

**New Sponsorship Program for University Students (2009)**

Recently, we received requests for financial assistance for the recently released and displaced university students from the Prof. N. Shanmugalingam, Vice Chancellor, University of Jaffna and Dr. N. Pathmanathan, Vice Chancellor, Eastern University. Initially we aim to provide financial support for university students from Vanni region, who lost their parental support.

**Sponsorship Program:**

Rs. 4000 – Rs. 6000per student per month.

The Treasury of the respective University will make monthly payment on a prescribed date of each month.

**How to sponsor:**

We request Aus. $50 per month to sponsor a student. Therefore we request you to transfer or deposit your money to 'Unifund Project' account at the Bendigo bank.

**Unifund Account**

All money should be deposited to the 'Australian society of Graduate Unifund' account.

Bank : Bendigo Bank — Bank : Homebush, NSW 2140

BSB : 633 – 108 — Acc : 118947092

**Contact Us:**

Please contact us if you wish to sponsor University students in North and East of Sri Lanka.

Phone : 612 – 9758 – 7970 or 0433 088 725 (Mobile)

Email : unifund.asoft@gmail.com

Website : www.kalappai.org

The Basis of Emotional Thinking of The Tamil Diaspora உலகத் தமிழர் உணர்வுகளின் கருவூலம்

Contact: PO Box 4040 Homebush NSW 2140.

Tele : 61 (0) 433088 725 or 612 - 9758 7970. Web : www.kalappai.org

# TAMIL GUIDE WILL BE ON THE INTERNET

உங்கள் அபிமான
தமிழ் கையேடு விரைவில்
இணையத்தளத்தில்...!

*Visit*

**www.TamilGuide.com.au**



**Contact:**
**(02) 9758 7970 or 0433 088 725**

Made by:
Mithra Arts & Creations Pvt Ltd.,
Ph : 91 44 2473 5314
E-mail: contact@mithra.co.in
Web : www.mithra.co.in